www.tamilarangam.net

# சுமைகள்

சுமைகள் 20 பங்குனி, சித்திரை 97 Sumaihal Nr 20 Mars, April 97 Los

## *முதலாளித்துவத்தின் சதி*

ஜப்பானியத் துதரகத்தை கைப்பற்றி 4 மாதங்களாக தமது கட்டப்பாட்டினுள் வைத்திருந்த டுப்பக்கமாரு தோழர்களுக்கு எமது வீரவணைக்கங்கள்.
ஏகாதிபத்தியத்தின் வஞ்சகத்தால், தங்களது மக்களின் விடிவிற்காக போராடிய தோழர்கள் மாவிரராணார்கள் என்ற செய்தி உலகில் ஒடுக்கப்படும் மக்களுக்கு ஓர் இடியாகவே இருந்திருக்கும். இதில் நடந்த வஞ்சகங்களை மக்களாகிய உங்களுக்கு தனியாக எடுத்துரைக்கத் தேவையில்லை. சுமைகள் இவ்யுத்தத்தில் உயிர் நீத்த 14 போராளிகளுக்கும் தனது வீர வணைக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறது. அதே வேளை இலங்கை ஒடுக்கப்பட்ட மக்கள் சார்பாகவும் உல ஒடுக்கப்பட்ட மக்கள் சார்பாகவும் தனது வீரஅஞ்சலியைச் செலுத்துகின்றது.

## சமாதானம் வெறும் கானல் நீரா?

இலங்கையில் மீண்டும் அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் பேச்சு வார்த்தை நடைபேறலாம் என பலா நம்புவதாக கருத்துகள் வெளியாகி வருகின்றன. இதற்கு முன்னுதாரணமாக இலங்கையின் இனவாதக் கட்சிகளான ஐக்கிய முன்னணிக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் சமாதனப் பேச்சு வார்த்தை தொடர்பான இணக்கம் காணப்பட்டுள்து. எனவும் இதனால் இனி பேச்சு வார்த்தை நடந்தால் ஒரு கட்சி மற்றயை கட்சிய விமர்சிக்காது. ஆதலால் தமிழ் மக்களின் யுத்தத்திற்கு ஓர் முடிவுகிட்டும் எனவும் கருத்துகள் வெளிவந்த வண்ணம் உள்ளது. இவை தொடர்பாக ஒவ்வொரு இலங்கை நாட்டுப் பிரஜையும், மக்கள் நலனில் அக்கறை கொண்டவர்களும் ஆராய வேண்டிய நில உருவாகியுள்ளது.
தனது நாட்டுக்குள்ளேயே ஆயிரம் பிரச்சனைகளையும் அதே வேளை வட அயர்லாந்தில் தனது ஆதிக்கத்தையும், மூன்றாம் உலக நாடுகளின் தலைவிதியை தன்னால் நிர்ணயிக்கப் படவேண்டும் என் துடித்துக் கொண்டிருக்கும் கிழட்டு ஏகாதிபத்தியமான இங்கிலாந்தின் வெளியுறவுப் பிரதி அமைச்சர் லியாம் ஃபொக்ஸ் தற்போது அரசுக்கும், புலிகளுக்கும் இடையில் பேச்சு வார்த்தை நடத்த முயற்சித்து வருகின்றார். இதில் என்ன வேடிக்கை என்றால் வட அயர்லாந்தின் பிரச்சனைக்கு இன்னும் முடிவு கட்டாத இவர்கள் தற்போது இலங்கைப் பிரச்சனைக்கு முடிவு கட்ட முன்வந்ததுதான்.
தற்போது தமிழர்கள் பிரச்சனைக்கு தீர்வு காண்பதில் இரு கட்சிகளும் ஒரு மித்த படி உள்ளது என்பது பலர் நினைப்பதைப் போல் உண்மையானதாக இருக்கமுடியாது. மாறாக இராணுவத்தினாலும் தமது இனவெறியாலும் தமிழர்களையும் உழைக்கும் மக்களையும்

4 பக்கம் பார்க்க ☞

Sumaihal post Boks 10, 5125 Bøvågen, NORWAY

ஒடுக்குவதை உலகிற்கு தெரியாது தடுக்கும் முன் முயற்சியே இதுவாகும். இதைவிட தற்போது கட்டுப்பாட்டுக்குள் உள்ள பகுதிகளில் தம்மால் நடத்துப்படும் மனித உரிமை மீறல்களையும் இனி மேடைகளில் பேசாது இருகட்சியும் இணைந்து இதைச் செய்யச் சதித்திட்டம் போட்டுவதற்கு எடுத்துக் காட்டே இந்த இரு கட்சியின் ஒன்று சேர்வும் ஆகும்.
அத்துடன் தமது புதிய அரசில் திருத்தல் சட்டத்தை முன்மொழிந்த சந்திரிக்கா அரசு அதில் அப்பளுக்கில்லாத இனவாதத்தை முன்வைத்துள்ளது. அதுமட்டுமல்லாது பேச்சு வார்த்தை தொடர்பாக புலிகளுக்கு இன்னம் அதிகார பூர்வமான அறிவிக்கவில்லை என புலிகளின் தலைமை அறிவித்துள்ள அதேவேளை தனது விஜயத்தின் போது இந்நாட்டுப்பிரச்சனையும் தனக்குத் தெரியும் என்ற வகையில் யசீர் அரபாத் தனது பத்திரிகையாளர் மகாநாட்டில் பேசிய பேச்சும் ஒரு வேடிக்கையான விடையமே. அதாவது இலங்கை இனப்பிரச்சனைக்கு தான் மூன்றாம் சக்தியாக பிரதிநிதித்துவம் செய்ய தயார் என்றதும், புலிகளை ஆயுதங்களைப் போட்டு விட்டு சமாதானப்பேச்சு வார்த்தைக்கு வரும்படி அழைப்பதும் ஒரு சதிநாடகமே. தான் தனது மக்களை ஏகாதிபத்தியத்தின் கையில் அடைவு வைத்துவிட்டு நிற்பதைப்போல் தமிழர்களையும் அவர்களின் சுயநிர்ணயப் போராட்டத்தையும் ஏகாதிபத்தியத்தின் கையில் காட்டிக் கொடுத்து விட புலிகளுக்கு தான் துணையாக நிற்கத் தயார் என மறைமுகமாக அறிவித்துள்ளார்.
இன்று இராணுவத்தால் நலிவடைந்த புலிகளையும் தனது நிலைப்பாட்டை தமிழர்கள் வாழும் பகுதிகளில் பிரயோகித்துவரும் அரசும் இனி பேச்சு வார்த்தை என்ற ஒரு கட்டத்திற்கு நகர்வதானால் அங்கு நிட்சயமாக தமிழர்களின் சுயநிர்ணய உரிமை பறிக்கப்பட் நிலையிலேயே பேச்சு வார்த்தை நடத்ததத் புலிகள் தள்ளப்படுவார்கள். (புலிகள் தற்போது தமிழர்களின் ஒரே பிரதிநிதி என்ற அளவிலேயே) இதற்கு மாறாக புலிகள் தாமும் சமாதானத்தைத் தான் விரும்புகின்றோம் என்று காட்டும் வகையில் எல்லா இயக்கங்களாலும் எற்றுக் கொள்ளப்பட்ட திம்புக் கோரிக்கையை முன்னிறுத்தி அரசை பேச்சுவார்த்தைக்கு வர கோருவதே தற்போது புலிகளின் முதற்கடமையாகும்.

# மக்களின் நலனுக்கு ஆபத்து அன்றும் இன்றும் ஒரே அளவிலேயே.

தமிழீழ விடுதலைப்போராட்டம் உச்சநிலை அடைந்து 14 வருடங்கள் ஆகின்றன. இன்னும் அதற்கு எந்தத் தீர்வுமில்லாது போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இப்போராட்டத்தில் ஆரம்பகாலத்தில் பல இயக்கங்கள் இதை வழி நடத்திச் சென்றன. (இவ் வியக்கங்கள் சரியான பாதைவில் வழிநடத்திச் சென்றனவா என்பது பற்றி ஆராய முற்றபவில்லை). 1986 பிற்பகுதிக்குப் பிறகு புலிகள் தாம் மாத்திரம் தான் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்ற எண்ணத்தின் அடிப்படையில் தமக்கொன ஒரு அரசை அமைத்து அதில் சிவில் நிர்வாகத்தையும் நடத்தி வந்தனர். அன்று புலிகள் தம்மை ஓர் மக்கள்படை என அறிவித்த போதிலும் மக்கள் மத்தியிலிருந்து அன்னியப்பட்ட நிலையில் இருந்ததை கணக்கெடுக்கவில்லை.
மக்களை விட அதிநவீன ஆயுதம் தான் ஒரு போராட்டத்தின் வெற்றியை நிர்ணயிக்கும் என நினைத்துப் பேசிய புலிப் பிரமுகர்களையும் மக்கள் இப்போராட்ட வரலாற்றில் சந்தித்திருக்கின்றனர். தமிழர்களை பிரதிநிதித்துவப் படுத்தும் பொறுப்பை தாமே தமது தலைக்கு மேல் போட்டவர்கள் இன்று தமிழர்களாலேயே (வடபகுதியில் உள்ளு மக்களாலேயே) காட்டிக் கொடுக்கப்படுகின்றனர். இதற்கு அடிப்படைக் காரணம் என்ன என்பதை நாம் எல்லோரும் அராயவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.
இலங்கையில் அரசியல் மாற்றம் (கட்சி மாற்றம்) 1977களின் பின்னர் மீண்டும் 1994களில் ஏற்பட்டது. ஆரம்பத்தில் பதவியில் இருந்து ஐக்கிய தேசியக் கட்சிக்கு இப்பிரச்சனையை தீர்வுக்குக் கொண்டு வர முற்படாமல் தனது இருப்பைப்

4ம் பக்கம் பார்க்க ☞

20ம் பக்கத் தொடர்ச்சி.

உட்செரிப்புக்உட்பட்டலல்ல. என்பதை நாம் தெழிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

இக்கட்டுரை தமிழ் நாட்டில் நடந்த உம் ஆண்டு தமிழிசை மகாநாட்டுக் குறிப்புகளை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது. இதுகளம் பத்திகைக்காக எழுதப்பட்டது.

16ம் பக்கத் தொடர்ச்சி.

இராணுவத்தில் ஊழியர்களது சுயவ'ருப்பத்த'லான பங்களிப்பும், உணர்வு பூர்வமான இயக்கப் பாத்திரமுமே மிக அடிப்படையான அம்சமாகும். ஊழியர்கட்கு யுத்தத்தின் நீதியான தன்மையும், அரசில் நோக்கங்களையும் புரிய வைப்பதனால், இராணுவத்தினுள் ஜனநாயக முன்னேடுப்புக்களை மேற்கொள்வதனால் இந்து அம்சங்களை தொடர்ந்து வளர்த்து எடுக்கலாம்.

இவ்வாறே ஒரு ஊளியன் அந்தத் தாபனத்துடன் கருத்து முரன்படுகிறானோ, போர்வீரன் எப்போது யுத்தத்தின் அரசியல் நோக்கோடு முரன்படுகிறானோ, எப்போது அதன் தாபன வேலைத்திட்டத்துடன் கருத்து வேறுபாடு கொள்கிறானோ அப்போதே அவன் அந்த இராணுவத்தில் இருந்து வெளியேறும் உரிமையைப் பெறுகிறான். இது அவனது அடிப்படை ஜனநாயக உரிமையே. இந்து உரிமை முறுக்கப்பட்ட பலவந்தமாக இணைத்து வைக்கப் பட்டிருக்கையில் அவனது உணர்வு பூர்வமான இயக்கப் பாத்திரம் மறைந்து விடுகிறது. இதற்கு மேல் இந்து இராணுவமானது கூலிப்பட்டாளத்தின் தன்மையைப் பெற்று விடுகிறது.

# சுமைகளும் மக்களும்

இன்று இலங்கை அரசியலில் பல நிகழ்வுகளை அவதானிக்க முடிகிறது. தேர்தல் கூத்துக்கள் நடந்து முடிந்துள்ளது, தேர்தல் கூத்து ஓர் திருடர் பாதை என்பதை மீண்டும் மீண்டும் எழுதிக் கொண்டிருக்கத் தேவையில்லை ஆனால் இந்த அரயசில் கட்சிகளில் சில மக்கள் நலம் என்ற பெயரில் தமது அரசியலை நடத்திக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் தமது இருப்பைத் தொடர்ந்தும் காப்பாற்றிக் கொள்ள பல வழிகளில் முயற்சித்துக் கொண்டும் காலத்துக்குக் காலம் அரசிலில் குத்துக் கரணம் அடித்துக் கொண்டிருக்கின்றனர். அரசியல் சதுராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்கள் தமது திருகு தாளத்தை **திரிபு** படுத்திக் கூறுகின்றனர். எந்த ஒரு அரசியல் செயற்பாடுகளும், தியாகங்களும், அர்ப்பணிப்புக்களின் அளவு கோலாக மக்களின் நலனில் இருந்துதான் அவற்றை தீர்மானிக்க முடியும்.

இந்நிலையில் மக்களின் எதிர்பார்ப்பு என்பது தமது எதிர்காலமானது அமைதியாகவும், சுபீட்சமானதாகவும் இருக்க வேண்டும் என்பதே இவற்றிற்கு ஒரே வழி மக்களின் நலனின் அடிப்படையில் இருந்து அரசில் செயற்பாட்டை வழங்குவதேயாகும்.

**சுமைகளின் புதிய விலாசம்:-**
**SUMAIHAL**
**POSTBOKS 10**
**5125 BØVÅGEN**
**NORWAY**

***தபாற் கணக்கிலக்கம்:*** –
0826 0868293

***ஆக்கபூர்வமான விமர்சனங்களையும், ஆக்கங்களையும் உங்களிடம் இருந்து எதிபார்க்கிறோம்*** ..

தாபனத்துடன் கருத்து முரன்பட்டு, ஆனால் பலவந்தமாக இணைத்து வைக்கப் பட்டிருப்பவர்கள் இரானுவத்தில் மிகவிரத்தியுற்றவராகிறார்கள் அவர்களிடம் முன்பு காணப்பட்ட தன்னலமறுப்பு, உறுதியான கட்டுப்பாடு, போர்க் குணாம்சம் ஆகியன மறைந்து போகின்றன. இந்து வீரர்களிடையே காணப்படும் ஏனோ தானோ என்ற மனப்பாங்கு அவர்களது அராஜக நடவடிக்கைகளுக்கும் பொறுப்பற்ற தன்மைக்கும், இன்ப நாட்டத்திற்கும் வழிகாட்டுகிறது. தன்னுடைய நியாயமான உணர்வுகளுக்கு தன்னுடைய சொந்தத் தாபனமே மதிப்புக் கொடுக்காததை உணரும் அவன் சாதரண மக்களின் உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுக்க மாட்டான்.

**(தொடரும்.)**

**பிழை திருத்தம் .**

**சென்ற இதழில் ஆங்கில எழுத்து வடிவில் இருந்தவற்றின் தமிழ் வடிவம். பக் 9 nghUshjha பொருளாதாய, பக் 11 NghuhLfpNwd;- போராடுகிறேன்,**
.

2ம் பக்கத் தொடர்ச்சி

பலப்படுத்தும் வகையில் தமக்குத் தேவையான போதும் புலிகளுடன் பேச்சுவார்த்தை, போர்நிறுத்தம் எனக் கூறி இருப்பை நீடித்தபடி இருந்தது. ஆனால் 1994 பின்னர் ஏற்பட்ட கட்சி மாற்றம் தமிழ் மக்கள் மீதான கடைந்தேடுத்த பயங்கர

வாதத்தைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது.

இதனடிப்படையில் முதலில் வலிகாமம் மேற்கு அதன்பின்பு தென்மாராட்சி, வடமாராட்சி என நகர்ந்து இன்று வடபகுதியையே புலிகள் இழக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். புலிகளின் இந்நிலைக்குக் காரணம் மக்களை விட ஆயுதத்தின் மேல் நம்பிக்கை கொண்டதும், மக்கள் மீது பயங்கர வாதத்தை கட்டவிழ்த்து விட்டதுமே. தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமைக்காகப் போராடப் புறப்பட்ட புலிகள் தமிழ் மக்களுக்கு அடிப்படைச் சுதந்திரத்தைக் கூட வழங்காததால் மக்கள் அவர்களை இன்று வெறுக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். அதைவிட இன்ற புலிகளை வடபகுதியில் காட்டிக் கொடுக்கப்படுகின்றது என்றால் அதற்கு இவர்களின் ஆட்சி மீண்டும் அங்கு ஏற்பட்டு விடுமோ என்ற பயம் தான் மக்களுக்கு. ஏனெனில் இவர்கள் ஆட்சி செய்யும் போது எத்தனை ஆட்டம் ஆடியவர்கள் என்று இவர்களின் நடவடிக்கையைப் ஆராய்ந்து பார்ப்பவர்களுக்குப் புரியும் ஒருவிடையமாகும். இவர்களின் ஆட்சிக்காலத்தின் பொது இவர்களால் பாதிக்கப்பட்டவர்கள் அதிகமானோர்கள். அதாவது சகோதரப் படுகொலையின் மூலமும் வீரவணக்கங்கள் மூலமும், துரோகத் தனம் என்ற வார்த்தை மூலமும் தமது கருத்துக்கு மாற்றுக் கருத்தைக் கொண்டவர்களை அழித்தொழித்தனர். அவர்களின் உறவினர் தாய்தந்தையர், மனைவிமார்கள், கணவன்மார்கள் என எல்லோரும் இதற்குக் காரணமாக இருந்தவர்களை பழிவாங்க முற்படுவதன் விழைவுதான் இக்காட்டிக் கொடுப்பு நடவடிக்கைகளாகும். இந்தக் காட்டிக் கொடுப்பு நடவடிக்கைகளை மூலம் தமது எண்ணத்தை நிறைவேற்ற பயன்படுத்தி வருகின்றது இலங்கை அரசு.

## மற்றைய இயக்கங்கள்

அன்று போராட்டத்தின் பங்காளிகள், மக்களின் பக்கம் நின்று மக்களை ஆபத்தில் இருந்து காப்பற்றுபவர்கள், தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்காக தமது உயிரைக் கூட தியாகம் வைக்கத் தயங்க மாட்டோம், பாட்டாளி வர்க்கத்தின் புரட்சியே எமது ஒரோ குறிக்கோள் என்று வாய்கிழியக் கத்திய மற்றைய இயக்கத் தலைமைகள் இன்று வடபகுதியை ஆக்கிரமித்துக் கொண்டுள்ளன. தமது வயிற்றை நிரப்பவும், தாம் மாத்திரம் சுகத்துடன் வாழ்ந்தால் போதும் என்ற கருத்துடனும் மக்களை மாக்களாக நினைத்தபடி உள்ள இவர்கள் இன்று யாழில் தமது காரியாலையங்களை நிறுவியுள்ளனர்.

ஏன் என்றால் ஆபத்தில் சிக்கியுள்ள மக்களைக் காப்பாற்றவாம். வேடிக்கையாக இல்லை. ஆம் இவர்கள் மக்களை ஆபத்திலிருந்து காப்பாற்றும் ஆபத்தாண்டவர்கள் தான் என மக்களை தாம் நம்ப வைப்பதற்காகவே.

மக்களும் தமது இன்னல்களுக்கு தீர்வு இவர்களால் கிடைக்கும் என்ற எண்ணத்தில் இவர்களை வரவேற்கவோ அல்லது காரியாலையங்களை நிறுவவோ விடவில்லை. ஏன் ஆரம்பத்தில் வடபகுதி மக்கள் மற்றைய அமைப்புகளிடம் ஒரு வேண்டுகோள் விடுத்தனர் அதாவது நாங்கள் இவ்வளவு காலம் பட்ட கஸ்டமும் போதும் இனியாவது எங்களை வாழ விடுங்கோ என்று. இவர்கள் வந்தால் எங்கே ஏற்கனவே இருந்த கொஞ்ச அமைதியும் கெட்டுவிடுமே என்றுதான். ஆயுதத்தை மாத்திரமே தமது துணையாக நம்பிய இவர்கள் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்திற்கு எதிர் முனையில் நின்று அவர்களுக்கு தொல்லை கொடுத்தனர். இனியும் இவர்களின் தொல்லை தொடரப்போவதை மக்கள் அறிந்த நிலையில் அஞ்சி நடுங்குகின்றனர். ஏன் இவர்கள் வந்து மீண்டும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்காகப் போராடி மக்களை துயரத்திற்கு போக்கிவிடுவார்கள் என்று கருதவில்லை. மாறாக ஆயுதத்தை வைத்து ஆட்சி செய்யப்புறப்பட்ட இவர்கள். தமது முன்னைய எதிரிகள், தமக்கு வேண்டாதவர்கள் என்ற பட்டியலைத் தயாரித்து அவர்களை பழிவாங்கும் நோக்கில் சில நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதே. இதற்கு இடையில் உட்படுகொலையையும் தொடர்ந்து வண்ணம் உள்ளனர். அதற்கு ஆதாரமாக அண்மையில் ஈ.பி.டி.பி யினர்

இருவர் வடபகுதியில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களை சுட்டவர்கள் ஈ.பி.டி.பி யினரே. இவ்வாறன ஆயுதக் கலாச்சாரம் மீண்டும் ஆரம்பித்துள்ளது. இதற்கு தீர்வாக மக்களின் பக்கம் நிற்கக் கூடியவர்களை துரோகிகள் என்ற பட்டத்தின் கீழ் துரோகக் குழுக்களும், புலிகளும் தொல்லை கொடுத்து வந்துள்ளனர்..

இனியாவது மக்களை நிம்மதியாக வாழவிடக் கூடிய தீர்வை தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து சக்திகளும் இணைந்து முன்வைப்பதன் மூலமும், அதனடிப்படையிலான போராட்டத்தின் மூலமுமே மக்களையும் நமக்கு தேவையான சுதந்திரத்தையும் பெற்றக் கொள்ள முடியும்.

மற்றைய இயக்கங்கள் விடுதலைப் போராட்டத்தைப் போறுத்த வரை எவ்வித பிரியோசனமும் இல்லை. ஏனேனில் இவர்களின் செயற்பாடு உயிர் வாழ்தல் என்ற நிலைக்கு அப்பால் செயற்பாடுகள் அமையாததும் ஆகும். ஆனால் இவர்கள் அரசில் அமைப்பு என்ற ரீதியில் ஒடுக்கு முறையாளர்களுடன் சேர்ந்து செயற்படும் போது மக்களை துன்பத்தில் அழ்த்துவதுடன், . போராட்டத்தை மழுங் கடிக்கவும், சர்வதேச சமுகத்தை திசை திருப்ப ஏதுவாகவும் இருக்கின்றனர்.

இந்நிலையில் கீழ்மட்டப் போராளிகளையும், அவர்களின் தலைமையையும் பிரித்துப் பார்க்க வேண்டியது அவசியமாகின்றது. அவ்வாறு பார்ப்பதன் ஊடாக அவர்கள் பற்றிய அணுகு முறையை மாற்றுவது புலிகளின் முன்னுள்ள கடமையாகும்.புதிய அணுகு முறையூடாக அடிமட்டப் போராளிகளுக்கு அவர்களின் அரசில் வழிப்பட்ட (கொள்கை) செயற்பாட்டை புலிகள் அங்கீகரிக்க வேண்டும். இதன் மூலமே மற்றைய இயக்கங்களின் போலித் தலைமைகளை தூக்கி எறிய கீழ் மட்டப் போராளிகளுக்கு சந்தர்ப்பம் கிடைக்கும். அத்தலைமைகளின் எதிர் புரட்சித் தன்மைகளை வெற்றி கொள்ள முடியும்.

### எங்கே எழும் கேள்விகள்.

கடந்த காலங்கள் போல் புலி ஆதரவாளர்களையும், அப்பாவி மக்களை புலி ஆதரவாளர் எனவும், தேசபக்தர்களையும், மற்றைய இயக்கங்களால் பழிவாங்கப் படுவது நிறுத்தப்படுமா?

புலிகளானாலும் சரி, மற்றைய இயக்கங்களானாலும் சரி, கீழ் மட்டப்போரளிகள் மேல் மட்டத் தலைமைகள் என கணக்கில் எடுக்காமல் பழைய கண்னோட்டத்தை வைத்தே மொத்து மாகத் துரோகிகள் என முத்திரை குத்தி அழித்தோழிப்பில் ஈடுபடுவதை நிறுத்துவார்களா?

சொகுசு வாழ்கை வாழ்நதவர்களுக்கும் இராணுவக் கட்டுப் பாட்டுக்குள் வாழ்ந்த போராளிகளுக்கும் (மற்றைய இயக்கப்) இடையே சிந்தனையில் மாற்றம் இருக்கும். இப்படிச் சிந்தனையில் மாற்றம் கொண்டவர்களை மக்கள் நலனுக்குச் சாதகமாகத் திருப்புவதில புலிகள் எவ்வளவு கவனம் எடுக்கப் போகிறார்கள்.

- EPDP, EROS, EPRLF, TELO, PLOT, ENDLF ஆகிய இயக்கங்களே! மக்களைத் தொல்லைப் படுத்துவதை நிறுத்து!.
- இயக்கங்களே! அரசுடன் சேர்ந்து செயற்படுவதை நிறுத்து!
- புலிகளே! கீழ்மட்டப் போராளிகளின், முற்போக்குச் சக்திகளின் அரசியல் செயற்பாட்டு உரிமையை அங்கீகரி!
- இனமோதலை பணமுதலைகளுக்கு எதிரான போராட்டமாக மாற்றுவோம்.!

நாம் ஒரு போதும் இறுமாப்பான பெருந் தேச வெறி கண்ணோட்டத்தை மேற்கொள்ளக் கூடாது.நமது புரட்சியடின் வெற்றி, நமது நிர்மாணத்தின் குறிப்பிட்ட சாதனைகள் ஆகிவற்றால் நாம் செருக்குடையவர்களாய் மாறக் கூடாது. ஒவ்வொரு தேசத்துக்கும் பெருதாயினும் சரி சிறிதாயினும் சரி பலமான அம்சங்களும், பலவீனமான அம்சங்களும் உண்டு. .

## மே 1

தொழிலாலர் தினமான இன் நாளில் அனைத்து புரட்சிகர இயக்கங்களுக்கும், புரட்சிகர தோழர்களுக்கும், உழைக்கும் தொழிலாளர் வர்க்கத்திற்கும் எமது புரட்சிகர வாழ்த்துக்கள்.

விடுதலைப் புலிகளுக்கான பகிரங்க மடலில் எமக்கு முரண்பாடுகள் காணப்பட்ட போதும் அதை மீள்பிரசுரம் செய்கின்றோம். இவ்மடலில் எமக்கு முரண்பாடான விடையத்தை விமர்சனத்துடனேயே பிரசுசிக்கின்றோம் அதாவது ''அரசின் திட்டமிட் சிங்களக் குடியேற்றங்களிலால் நீங்கள் மேற்கோண்ட இராணுவ நடவடிக்கைகளை இனவாதப் படுகொலை என நாம் கருத வில்லை. எதிரி தனது அரசில் இராணுவ நோக்கங்களுக்காக எந்தப் பகுதி மக்கள் மத்தியில் உள்ள பிற்போக்கு கூட்டத்தை கருவியாகப் பயன்படுத்து வானேயானால் அப்பிற்போக்குக் கூட்டம் மேல் அரசியல் இராணுவ நடவடிக்கை எடுக்க வேண்டிய தவிர்க்க முடியாத நிலை போராளிகளுக்கு ஏற்படும்.'' எனக் குறிப்பிட்டுள்ளனர்.

அதாவது புலிகளின் இவ் நடவடிக்கை ஒரு இனவாதப் படுகொலையே என்பதில் எவ்வித மாற்றமும் எமக்கு கிடையாது அப்பாவிமக்களையும், பிற்போக்கு சக்திகள் என குறிப்பிடும் பலரையும் தமிழர்களின் பிரதேசத்தில் குடியேற்றுகின்றது என்றால் அதற்குக் காரணம் அரசு தனது சுயநலம் கருதியே ஆகும். இங்கு பிற்போக்கு சக்திகள் எனக் கூறப்படுபவர்கள் யார் என்பதை முதலில் வரையறுத்துக் கொள்ள வேண்டிய நிலை அவசியமானது. அரசு இருப்பதற்கு இடத்தையும், பாடசாலை, மற்றும் அனைத்து வசதியையும் கொடுத்து, தெருவை தமது இருப்பிடமாகக் கொண்டவர்களை குடியேற்றும் போது அவர்களின் கையில் அவர்களுக்கு உண்மையான காரணத்தை அறியாமலிருக்க ஆயுதத்தையும் கொடுத்து ''இது உனது தற்காப்புக்கு'' எனவும், இனவெறியையும் ஊட்டி அனுப்புகின்றது அவ்வாறு குடியேறுபவர்களை நாம் பிற்போக்குச் சக்திகள் என வரையறுக்க முடியாததுடன் குடியேற்றங்கள் மீதான இராணுவ நடவடிக்கைகளையும் நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

**இனங்களுக்கிடையிலான உறவுகள் என்பது பொருளாதாரத்தில் மாற்றம் ஏற்படும் போது சிதைவடைகின்றன. இவற்றை போக்கப் போருளாதார உற்பத்தி முறையிலும், பண்பாட்டுத் தளத்திலும் மாற்றம் கொண்டு வர வேண்டும். அதனை விடுத்து இனவாதத்திற்குப் பலியாகிப் போனவர்களை தாக்குதல் மூலம் அழிப்பதையும் ஏற்றுக் கொள்ள முடியாது. மாறாக புரையோடிப் போயுள்ள (வர்க்க விழிப்பற்ற) போலி உணர்வைப் போக்க சமூகம் பற்றி ஆய்வு செய்து மாற்றுத்திட்டத்தை முன்வைக்க வேண்டியதே சமூகப் புரட்சியை விரும்புவர்களின் கடமையாகும்.**

# விடுதலைப் புலிகளின் தலைமைக்கு தேசபக்தர்களின் பகிரங்க மடல்.

போராடும் புலிகளுக்கு,
அன்புடையீர்

தமிழீழ தேசிய விடுதலை இயக்கத்தினை உங்கள் தோள்களில் மட்டும் சுமந்து வருவதற்காக தேசபக்தன் தனது வாழ்த்துக்களையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறது.

இலங்கை மேலான இந்திய ராணுவ ஆக்கிரமிப்பின் தொடக்க கால கட்டத்தில் உங்களுக்கு பகிரங்க மடல் ஒன்றை வெளியிட்டிருந்தோம். இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தை அம்பலப்படுத்தி போராடி வெற்றி கொண்டீர்கள். அதிலிருந்து ஒடுக்கப்பட்ட மக்கள், விடுதலை சக்திகள் தமது கவனத்தை உங்கள் மேலும் திருப்பியிருக்கின்றனர். ஆனால் அதற்குப் பிந்தய ஆண்டுகளில் உங்களால் ஈர்க்கப் பட்டவர்களுக்கு தந்து படிப்பினைகள் ஏமாற்றத் தன்மை கொண்டவை.

தவறுகள் களையாமல் பயணத்தை தொடர்ந்தீர்கள். தமிழீழ தேசிய இன விடுதலை யுத்தத்திற்கு எதிரான ஏகாதிபத்திய – பிராந்திய விரிவாதிக்க – சிறிலங்கா பேரினவாதக் கூட்டை பிரதான பகைமுரண்பாடாகக் கொள்ளாமல் (தமிழீழ மக்கள் மத்தியில்) இலங்கை மக்களுக்கிடையில் இருந்து முரண்பாடுகளை முதன்மையாகவும், பகை முரண்பாடுகளாகவும் நீங்கள் மாற்றியதால் இன்று தமிழீழ சிறிலங்கா மக்களிடம் இருந்து அந்நியப்பட்டுப் போயுள்ளீர்கள். பிரதான பகைமுரண்பாட்டில் நீங்கள் சந்தர்ப்பவாதச் சார்பு நிலை உங்கள் மேல் உலக மக்களை சந்தேகப்பட வைத்துள்ளது.

தமிழீழ வரலாற்றில் மிகப் பொரிய பின்னடைவை தமிழீழ தேசிய விடுதலை இயக்கமும், புலிகளும் இப்போழுது எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. தமிழீழ மக்களின் பிரிந்து போவதுடன் கூடிய சுயநிர்ணய உரிமைப் போராட்டம் அரசில் இராணுவ ரீதியல் பின்தள்ளப்பட்டும், பலவீனப்பட்டும் இருக்கின்றது. தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தின் மேலான உங்களின் குறிந்தேசிய

பார்வையும், சனரஞ்சகமான உடனடி வெற்றியில் நாட்டமும், ஏகாதிபத்தியங்களுக்குப் பின்னால் உங்களை ஓடத் தூண்டுகிற நேரத்தில் ஏகாதிபத்தியத்திற்கும் பிராந்திய விரிவாக்கத்திற்கும் எதிரான மக்கள் போராட்டங்களுடன் நீங்கள் ஐக்கியப் படுவதையும் தடுத்து வருகிறது. போராட்டத்தின் நடுநிலைச் சக்திகளை எதிரி அணிக்கு வ'ரட்டியதுடன', தேசபக்தர்களையும், புரட்சியாளர்களையும் கூட துரோகிகள் என்ற அடையாளப்படுத்தி அழிக்கவும் வைத்தது.

உங்களின் இத்தகைய தடை அழித்தொழிப்புக்காக தேசபக்த முன்னணியினர் கழகம் வண்மையான கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறது. அரசியல் முரன்பாடுகளும் மாற்றக் கருத்துக்களும் விமர்சனங்கள் மூலமே தீர்த்துக் கொள்ளப்பட வேண்டும். மாறாக ஆயுத முனையில் அல்ல. இனிவரும் காலங்களில் இத்தகையி அழித்தொழிப்புக்களை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று கோட்டுக்கொள்கிறோம்.

சிங்கள – பௌத்த பேரினவாதத்திற்கு எதிரான உங்களின் தமிழ் குறுந்தேசிய வெறி சிங்கள, முஸ்லீம் மக்களின் பின்னால் அணிவகுக்கச் செய்தது. தமிழீழப் பொராட்டத்தின் மேல் சிங்கள மக்களுக்கு இருந்த ஐயப்பாடும் அச்ச உணர்வும் போக்கப்பட்டிருக்க வேண்டும். தமிழீழ போராட்டத்திற்கான தமிழ் மக்களின் நியாயமான உணர்வுகளை எடுத்துச் சென'றிருந்தால', போராட்டத்தின் வலுவான ஆதரவு சக்கதியாக சிங்கள உழைக்கும் மக்கள் பரிணமித்திருப்பார்கள். ஆனால் அவ்வாறு செய்யப்படவில்லை. மாறாக அவர்கள் மேல் நிகழ்த்திய உள்நோக்கம் கொண்ட இனப்படுகொலைகள் மூலம் அவர்களை எதிரி முகாமிற்கு செல்ல வைத்தீர்கள். ஆனால் அரசின் திட்டமிட்ட சிங்கள குடியோற்றப் பகுதிகளுன் மேல் நீங்கள் மேற்கொண்ட ராணுவ நடவடிக்கைகளை இனவாதப் படுகொலையாக நாம் கருதவில்லை. எதிர தனது அரசில் இராணுவ நோக்கங்களுக்காக எந்தப் பகுதி மக்கள் மத்தியில் உள்ள பிற்போக்கு கூட்டத்தை கருவியாகப் பயன்படுத்து வானேயானால் அப்பிற்போக்குக் கூட்டம் மேல் அரசியல் இராணுவ நடவடிக்கை எடுக்க வேண்டிய தவிர்க்க முடியாத நிலை போராளிகளுக்கு ஏற்படும். அதேவேளையில் முஸ்லீம் மக்கள் மேலான உங்கள் இராணுவ நடவடிக்கையை அவ்வாறு கருத வில்லை.

தமக்கென்று வரையறுத்த பூகோளப் பரப்பைக் கொண்டிராத முஸ்லீம் மக்கள் தனித்துவமான பண்பாட்டு அடையாளங்களோடும் அதேநேரம் மற்றைய இன மக்களின் விஷேசப் பண்பாடுகளோடு தம்மை அய்க்கியப்படுத்தி இலங்கையில் பரந்து வாழ்கின்றனர். தமிழீழப் பகுதியில் வாழக்கூடிய முஸ்லீம் மக்களின் உரிமைப் போராட்டங்கள் தமிழ் மக்களின் போராட்டத்தோடு பிணைந்து நிற்பது, துணை அங்கமாக இருக்கக் கூடியது. பேரினவாத அரசே இரு மக்களுக்குமான பொது எதிரி. ஆனால் முஸ்லீம் மக்களை எதிரியாக கருதி அவர்களை வடக்கில் இருந்து பெயர்த்து அகதிகளாக்கிநீர்கள். சில எல்லைப் பகுதிகளில் படுகொலையும் செய்தீர்கள். இந்த நடவடிக்கைகளை தமிழ் வணிக முதலாளிகளும், இந்து சைவ மதபீடங்களும் உளப்பூர்வமாக ஆதரித்தனர். இந்த மக்களை 'காட்டிக் கொடுப்பவர்கள்' என்று நீங்கள் அடையாளப்படுத்தியதும் கூட தமிழ் மேல்தட்டுப் பிரிவினரால் காலம் காலமாய் சொல்லப்பட்டு வருவதே. இது காழ' புணர'வ'ல' சொல்லப்பட்டதே தவிர வேறல்ல.ஏனெனில் இன்று முஸ்லீம்கள் அறவே இல்லாத யாழில் தான் இன்று நீங்கள் தோற்றுப் போயிருக்கிறீர்கள். இதுவரைக்கும் அம்மக்கள் குடாப்பகுதிகளுக்கு திருமபிவர அனுமதிக்கவில்லை. இந்துமத பண்பாட்டு வைக்கப்பட்ட குறுந்தேசியப் பார்வையில் முஸ்லீம் மக்கள மேலான உங்களின் அடக்கு முறையும் அழித்தொழிப்பும் தோற்றம் பெற்றிருக்கிறது.

உங்கள் இயக்கத்தின் இத்தகைய அடிப்படைத் தவறுகள் ஒவ்வோன்றையும் எதிரி தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தினான், பிரச்சாரப் படுத்தினான். புலிகளை பயங்கர வாத இயக்கம் என்று அவனால் கூற முடிந்தது. முஸ்லீம் மக்களை தமிழீழப் பொராட்டத்தில் இருந்து நீங்கள் அந்நியப் படுத்திய நோரத்தில், எங்களுக்கு எதிரான அரசியல் ஆயுதமாக அவர்களை மாற்றுவதில் எதிரி வெற்றி கண்டான். ஒரு பகுதியினரை ஆயுத பாணியாக்கினான்.

இத்தகைய காரணங்களினால் சிறிலங்கா இனவாத அரசின் அரசியல், இராணுவத் தளங்கள் விரிவடைந்து புதிய பரிணாமங்களைத் தொட்டது. 1994க்குப் பின் அரசில் துறையில் எதிரியே முந்நிலை வகித்தான்.

இறுதியில் உங்கள் இயக்கத்தின் இராணுவ மேலாண்மை உடைக்கப்பட்டு அந்த இடத்தில் அரச படைகளின் அதிகாரம் நிறுவப்பட்டு வருகிறது.
இங்கு கவனத்தில் கொள்ள வேண்டியது என்ன வெனில் சிறிலங்காப் போரினவாத அரசு தமிழீழ மக்களின் அடக்குமுறையாளன் மட்டுமல்ல, சிங்கள, மலையக, முஸ்லீம் உழைக்கும் மக்களின் அடக்கு முறையாளனும் கூட. ஏகாதியபத்திய ஆளும் வர்க்க, அதிகார வர்க்க, இனவாத நலன் சார்ந்த சிறிலங்கா அரசு இலங்கை மக்களின் அரசாகவும் தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளது. தன்னை ஒரு பௌதீக சக்தியாக திடப்படுத்திக் கொண்டுள்ளது. ஒரு பௌதீக சக்தியை வீழ்த்த இன்னோரு பௌதீக சக்தியால் மட்டுமே முடியும். தமிழீழ தேசமும் அதன் மக்களும் தன்னளவில் ஒரு பௌதீக சக்தி. ஆனால் புறநிலையில் அது இலங்கை என்கின்ற முழுமையான பௌதீக சக்தியின் ஒரு பிரதான கூறு மட்டுமே.
தமிமீழ தேசிய இன விடுதலை யுத்தம் அதன் இலக்கை அடைவதற்கு, ஒரு சரத்தில் கிரமப்படி தொடுக்கப்பட்ட மணிகளைப் போன்று அனைத்து இனமக்களும் போரினவாத அடக்கு முறைக்கு எதிராக ஓர் அணியில் நிரைப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். தமிழீழப் போராட்ட வளர்ச்சிக்கும், எதிரியின் வீழ்ச்சிக்கும் இது அவசியமான முதன்மையான பணியாகும். அதற்கு முரணாக தமிழீழ மக்களின் போராட்டத்தை அதன் முற்போக்குத் தன்மை வாய்ந்த உள்ளடக்கத்தில் இருந்து பிரித்து எல்லாவிதமான வெறுக்கத்தக்க ஆதிக்கப் பண்புகளின் வடிவமாக புலிகளை பிரதிநிதுத்துவப்படுத்தி நிற்கிறீர்கள் என்பதே உண்மை.
இப்போக்கிற்கு காரணமான த.ஈ.வி.புலிகள் இயக்கத்தின் சித்தாந்த அடித்தளம் தான் இலங்கையின் தேசிய இனங்களுகஇகு இடையிலான எதிரிகளுக்கு எதிரான அணி சேர்க்கையையும் பிளவு படுத்தியுள்ளது.
மக்கள் போதிய தியாகம் செய்யாததும், போராளிகள் மற்றும் ஆயுதப் பற்றாக்குறையும் யாழின் வீழ்ச்சிக்கு காரணம் என அறிவித்தீர்கள்
(1) தமிழீழ மக்களின் அதிலும் குறிப்பாக உழைக்கும் அடித்தட்டு மக்களின் தியாகங்களும், அர்ப்பணிப்புகளுமே தமிழீழத்தின் வரலாறாகவும் புலிகளின் வீர வரலாறாகவும் இருக்கிறது. அந்த மக்களின் கர்ப்பத்தில் தோன்றியவர்களே இன்று மாவீரர் கல்லறையில் துயில்கின்றனர். இருந்தும் நீங்கள் அடித்தட்டு மக்கள் விடுதலையை, நலன்களை முன்னிறுத்தாது மேல் தட்டு மக்களின் நலன் சார்ந்து நிற்கிறீர்கள். எந்த மக்கள் தமிழீழத்தில் சாதிய – அரசியல் – பொருளாதார ஒடுக்கு முறைக்கு உட்பட்டவர்களாய் இருந்தார்களோ அம்மக்கள் தமிழீழப் பொராட்டத்தில் ஸ்தாபன மயமாவதை, ஆயுதபாணியாவதை நிராகரித்து வந்தீர்கள், எதிர்க்கிறீர்கள். உள்ளூர் பிரச்சனைகளின் போது மேல்தட்டு மக்களின் பிரதிநிதியாக அடையாளப் படுத்தினீர்கள். இத்துடன் நின்று விடாது அவ் அடித்தட்டு மக்களை யாழின் தோல்விக்கான காரணமாக குற்றப்படுத்தியுள்ளீர்கள். மன்னிக்கும் மனப்பாண்மை கொண்ட அம்மக்களே போராட்டத்தின், த.ஈ.வி.பு இயக்கத்தின் பின்னடைவுக் காலங்களில் துணை நின்றவர்கள். உழைக்கும் மக்கள் நலனை முன்னிறுத்துவதே தமிழீழப் போராட்டத்திற்கான முன்நிபந்தனையாகும்.
(உ) த.ஈ.வி.பு களின் தனி இயக்கச் சர்வாதிகாரம் பிற இயக்கங்களுடனான அரசியல் முரண்பாட்டை ஆயுத மோதல்களாக மாற்றியது. ஆயிரக்கணக்கான பிற இயக்கப் போராளிகள் அழிக்கப்பட்டனர். தவிர்க்க முடியாதபடி எதிரியிடம் அப்பாவிகள் சரணடைந்தனர். போராட்டத்தில் இருந்து அந்நியப்படுத்தப்பட்டனர். எதிரி மேலான சனரஞ்சகமான தாக்குதல்களும், புலிகளின் இயக்கத்துக்குள்ளான ஆயுத மோதல்களும் போராளிகளின் இருப்பை கணிசமான அளவு குறைத்தது. இதற்கான பிரதான பொறுப்பு புலிகள் இயக்கத் தலைமையையே சாரும். இது போராட்டத்திற்கு ஈடுசெய்ய முடியாத இழப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. நேச சக்திகளுடனான அரசியல் முரண்பாட்டை அரசியல் வழியிலேயே தீர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.
போராடும் மக்கள் போரை நடத்துவதில் மரபு வழிப்பட்ட முறைகளோடு மட்டும் நின்று விடுவதில்லை. மக்கள் திரள், எழுச்சிகள், புரட்சிப் போர்கள், நாடேங்கிலும் கொரில்லாத் தாக்குால்கள் பலம் பொருந்திய ஒரு சேனையை வலுக்குறைந்து ஒரு சோனை முறியடிப்பதற்கான ஒரேயேரு வழியாகும். பரந்து பட்ட ஆயுதபாணியான வெகுசனங்களே இதன் ஆதாரக் கூறு. இதனடிப்படையில் தமிழீழ

மக்கள் ஆயுதபாணி ஆக்கப்பட்டிருந்தால், ஒவ்வேரு கிராமமும் ஒரு கோட்டையாக மாற்றப் பட்டிருந்தால், கொரில்லா யுத்தமும் ஸ்தாபன மயமான மக்கள் போராட்ட முறையும் சரியான திசை வழியில் இணைக்கப்பட்டிருந்தால் சிறிலங்காவின் கூலிப்படைப் போர் நடவடிக்கைகளின் தொடக்க நிலையிலேயே முறியடிக்கப்பட்டிருக்கும்.
மேலும் எதிரி தற்காப்பு நிலையில் முகாம்களுக்குள் இருந்த போது அதை மூலோபாய ரீதியான எதிரியின் பின்வாங்குதலாக கணிப்பிட்டதுடன் குடாவை விடுவிக்கப்பட்ட பிரதேசமாகவும் கொண்டீர்கள். ஓர் அரசின் நிலை பெற்ற தன்மைக்கு அடிப்படையான பௌதிக கூறுகளைக் கொண்டிராத ஒரு தமிழீழ அரசையும் உருவாக்கினீர்கள். குடாப் பகுதியில் இராணுவ முகாம்களுக்குள் முடங்கி இருந்து அவனின் மூலோபாய ரீதியிலான தற்காப்புக் கட்டமாகவே கருத வேண்டும். முடங்கியிருந்தானே தவிர ஓய்ந்து பொகவில்லை. வலுவானதோரு யுத்தத்தைப் புரிவதற்கு தன்னை அரசியல் இராணுவ ரீதியில் தயார் செய்து வந்தான்.
யாழ், கிளிநோச்சி இராணுவ நடவடிக்கைகளின் வெற்றிக்கு சிறிலங்கா அரசின் படைபலம், அரசியல் பலம் மட்டும் காரணமாக இருக்கவில்லை. த.ஈ.வி.பு இயக்கத்தின் குறுந்தேசிய சிந்தனை — செயல்பாடு, மக்கள் யுத்த முறை மறுதலித்து நிற்பது போன்ற அடிப்படைத் தவறுகள் எதிரியின் வெற்றிக்கான கதவுகளைத் திறந்து விட்டுள்ளது.

1987ல் அரசியல் இராணுவ ரீதியிலான வரலாற்று மோசடி மிக்க இந்திய – இலங்கை ஒப்பந்தத்தை தனது இராணுவத்தின் துணையுடன் தமிழ் மக்கள் மேல் இந்திய விரிவாதிக்க அரசு திணிக்க முற்பட்டது. அந்த சந்தர்ப்பத்தில் கூட தமிழ் மக்களின் உரிமையையும், வாழ்வையும் உறுதி செய்யக் கூடிய தமிழீழத்திற்கு மாற்றான ஒரு தீர்வுத் திட்டத்தை நீங்கள் வெளிப்படையாக வைத்து எதிரியை எதிர்க்க வில்லை. வல்லரசுகளுடனான இலாப நட்டக் கணக்கில் இருந்தே இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தை எதிர்த்தீர்கள். துரோகத்தனமான இந்திய – இலங்கை ஒப்பந்தத்தையும் நீங்கள் நிராகரிக்க முன்வந்ததும் இவ் அடிப்படையில் தான். விரிவாதிக்க அரசின் இராணுவத்தை எதிர்த்து நின்றீர்களே ஒழிய இந்திய அரசின் விரிவாதிக்கத்தை அல்ல.
அதோபான்று 1995 இல் சந்திரிக்கா அரசும் அரசியல் ராணுவ ரீதியிலான ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைத்து, பிராந்திய விரிவாதிக்க அரசுகள் மற்றும் உலக வல்லரசுகளின் துணையுடன் இன அழித்தோழிப்பு யுத்தத்தை கட்டவிழ்த்து விட்டுள்ளது. அமைதியின் மேல் உள்ள தீவிர விருப்பத்தால் தீர்வுத் திட்டம் முன்வைக்கப்படவில்லை. யுத்தம் நடத்தப்பட வேண்டிய நிர்ப்பந்தம் சிறிலங்கா அரசிற்கு தொடர்ந்து இருந்து வருகிறது. யுத்தம் வெறுமனே இராணுவ உள்ளடக்கத்தை கொண்டதாக இருக்காமல் அதற்கு ஒரு அரசியல் உள்ளடக்கத்தையும் கொடுத்ததன் மூலம் யுத்த நீடிப்பிற்கு ஒரு காரணத்தை கற்பித்துக் கொள்ள முயல்கிறது.

சந்திரிக்கா அரசின் மேல் உங்களுக்கு இருந்து மயக்கமும், சந்திரிக்காவின் காய் நகர்த்தலை வெறுமனே ராணுவக் கண்ணோட்டத்தில் மதிப்பிட்டதும் எதிரி விரித்த வலையில் த.ஈ.வி.பு இயக்கம் சிக்கிக் கொள்வதற்கு ஏதுவாக இருந்து விட்டது. ஒரு நியாயமான தீர்வுத் திட்டத்திற்கு இனவாதிகளும், அரசும் என்றுமே தயாராய் இல்லை. தமிழீழ தேசிய இனப்பிரச்சனையை முடிவிற்குக் கொண்டு வர ராணுவத் தீர்விலேயே நம்பிக்கை கொண்டுள்ளார்கள். 1985 இல் முன்வைக்கப்பட்ட திம்புக் கொரிக்கை பரந்த மட்டத்தில் ஆதரவைப் பெற்ற ஒன்று. தமிழ் மக்களின் ஜனநாயகக் கொரிக்கையை அது உள்ளடக்கத்தில் கொண்டுள்ளது. அன்று உங்களாலும், துரோகக் குழுக்களாலும் ஏற்றுக் கொள்ப்பட்டிருந்தது. இன்று திம்புக் கோரிக்கையைக் கூட கைவிட்டு நிற்பது தமிழ் மக்களுக்குச் செய்யும் துரோகமாகும். 1995ல் சந்திரிக்காவின் தீர்வுத் திட்டுத்திற்கு மாறாக திம்புக் கோரிக்கையை நீங்கள் முன்வைத்திருந்தால் சந்திரிக்காவின் சமாதான வேசத்தை நீங்கள் கலைத்து இனவாத முகத்தை அம்பலப்படுத்தி இருக்க முடியும். இனவாத அரசுடன் கூட்டுச் சேர்ந்திருக்கும் துரோக அமைப்புகளையும் அரசுக்கு எதிராக நிறுத்தியிருக்க இயலும். பின் தள்ளப்பட்டிருக்கும் பொராட்டத்தின் பண்பு ரீதியிலான அடுத்த கட்ட வளர்ச்சிக்கு இட்டுச்செல்ல திம்புக் கொரிக்கையை

முன்வைப்பது மிக அவசியமானது. இதற்கு இன்னும் காலம் கடந்து விடவில்லை. மாறாக இதற்கு அவசியம் அதிகரித்து வருகிறது. தமிழ் மக்களின் தனித்தத்துவத்தையும், அடை யாளத்தையும் அபாயத்திற்கு உள்ளடக்கக் கூடிய சந்திரிக்கா அரசு முன்வைத்த தீர்வுத் திட்டும் எரிக்கப்பட வேண்டியது.

''புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்'' என்ற உங்கள் வாசகம் பிரசித்தி பெற்றது. தமிழீழமே தமிழ் மக்களின் கோரிக்கை. தமிழீழ தேசபக்த முண்னனியினர் கழகம் இதை முன்வைக்கிறது. ஆனால் எமது கேள்வி விரிவாதிக்க நாடுகளை – உலக வல்லரசுகளை எதிர்த்து நிற்கின்றதா? அல்லது சார்ந்து நிற்கின்றதா? இந்த லட்சியப் பயணத்தை தொடர்வது என்பதே.

இனவாத அரசுக்கு எதிரான தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டம் சாரம்சத்தில் வல்லரசுக ளுக்கும், இந்திய விரிவாதிக்க த்திற்கும் எதிரான போராட்டமே. இறையாண்மையுள்ள தமிழீழம் தான் குறிக்கோள் எனில் பிராந்திய அரசுகள் – உலக வல்லரசுகளுக்கு எதிராக அவற்றை எதிர்த்துப் போராடும் மக்களுடன் ஒன்றுபட்ட ஒரு இடையறாத நீண்ட காலப் போராட்டத்தை, யுத்தத்தை நடத்துவதன் மூலமே தமிழீழம் சாத்தியம்.

இந்திய அரசு தனது விரிவாதிக்கக் கரங்களை தெற்காசியாவின் மேல் பரப்புகிறது. உல வல்லரசுகளின் சந்தை ஆதிக்கத்திற்கான, ராணுவ மயமாக்கலுக்கான போட்டி அரங்காகவும் இப்பிராந்தியம் வெகு வேகமாக மாற்றப்பட்டு வருகிறது. இந்தச் சூழலில் தான் துணைக் கண்டத்தில் தேசிய இனங்களுக்கான போராட்டங்களும் கொந்தளித்துக் கொண்டு இருக்கிறது. பிராந்திய அமைதி, இனங்களுக்கு இடையிலான சமத்துவம், நல்லிணக்கம் தான் ஒரு குறுந்தேசிய இனத்தின் சுதந்திரத்திற்கும் அமைதிக்கும் உத்தரவாதம் அளிக்கக் கூடியது. இப்பிராந்திய மக்களின் விடுதலை என்பதும், தமிழீழ விடுதலை என்பதும் ஒரு நாணயத்தின் பிரிக்க முடியாத இரு பக்கங்கள் போன்றது. வளர்ந்து வரும் போராட்டங்கள் பிராந்திய அரசின் – உலக வல்லரசிய நலன்களுக்கு அச்சுறுத்தலாக இருப்பதால் அவற்றை அழித்தொழிக்கவே இவ்வரசுகள் முற்படும். கடந்த தசாப்பத்தில் தமிழீழ போராட்ட வரலாற்றை இதற்கு சிறந்த உதாரணமாகக் கொள்ள முடியும். இந்திய விரிவாதிக்க அரசும், உலக வல்லரசுகளும் தமிழீழ மக்களின் உரிமைக்கு பாதுகாவலராக இருக்க முடியாது. நடுநிலைப் பாத்திரம் வகிக்கவும் இயலாது என்பதே இப்பிராந்தியத்தின் அரசியல் நிகழ்வுகள் மற்றும் தமிழீழப் பொராட்ட வரலாற்றில் இருந்தும் கற்றுக் கொள்ளக் கூடிய பாடம்.

பிராந்திய விரிவாதிக்க அரசின் ஆக்கிரமிப்பு இராணுவத்தை முதலில் எதிர்த்து வென்ற பெருமை தமிழீழ மக்களையும், உங்களையும் சாரும். ஆனால் அந்தப் பணி தொடரவும் இல்லை, நிறைவடையவும் இல்லை. இந்திய அரசிட் இப்போழுது நீங்கள் மறைமுகமாக நீட்டும் நட்புக்கரம் தமிழீழப் பொராட்டத்தையும், இப்பிராந்திய மக்களின் போராட்டங்களையும் அழிப்புப் பாதைக்கு இட்டுச் செல்லக் கூடியது.

1987 ல் பிராந்திய விரிவாதிக்க அரசை எதிர்க்க உலக அரசுகளையும், சிறிலங்கா அரசையும் நாடினீர்கள். இன்று உலக வல்லரசுகளிடம் இருந்து தனிமைப்பட்டுப் பொயுள்ள நிலையில் பிராந்திய விரிவாதிக்க அரசிடம் நேசக்கரம் நீட்டுகிறீர்கள். வல்லரசுகளே கதி என இருந்தால் தமிழீழத் தாகம் என்பது இரத்தத் தாகமாகவே மட்டும் இருக்கும். நாளை மலரப் பொகும் தமிழீழம் அடிமைத் தமிழீழமாகவே பெயர் பெறும்.''இதுவரை காலமும் சிந்திய இரத்தமும், இழப்பும், நெருப்பும் இன்னு மொருவனுக்கு அடிமை யாகவா'' என்ற வரிகள் அதைப்படித்த கவிஞனின் குமுறல் மட்டுமல்ல அதுவே தேசத்தின் கொதிப்பாகவும் உள்ளது.

பாரிய நெருக்கடிக்குள்ளும், பின்னடைவுக்குள்ளும் தள்ளப்பட்டிருக்கும் தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை மீட்டெடுக்க வேண்டிய கடமை தமிழீழ விடுதலைப் போராளிகளுக்கு உள்ளது. உங்கள் இயக்கத்தின் அழித்தொழிப்பையும், அடக்கு முறையையும் எதிர் கொண்டே அவர்கள் இப்பணியைத் தொடர வேண்டியுள்ளது. இருந்தும் எதுவித காழ்புணர்வும் இல்லாமல் எதிரிக்கு எதிரான போராட்டத்தில் சகோதர சக்திகள் ஒன்று பட்டு நிற்கவேண்டிய அவசியத்தை தேசபக்தர்கள் என்றும் புறக்கணிக்க வில்லை. போராட்டத்தின் வளர்ச்சிக்கு இன்றியமையாததான கீழ் கண்ட நிலைப்பாடுகளில் நீங்கள்

பகிரங்கமான நிலைப்பாட்டை எடுப்பது சிறிலங்கா அரசிற்கும் மற்றும் வல்லரசுகளுக்கும் எதிராகப் போராடும் சக்திகளுடன் ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்தும்.

- சிறிலங்கா அரசுடனான பேச்சு வார்த்தையில் திம்புக் கொரிக்கையை முன்னிறுத்த வேண்டும். அதன் மூலம் சனநாயக சக்திகளை போராட்டத்தின் பக்கம் வென்றேடுக்க வேண்டும்.
- சிறிலங்கா அரசுக்கு எதிராகப் பொராடும் அனைத்து அமைப்புகள் மீதான தடையை நீக்க வேண்டும். அவர்களை அழித்தொழிப்பதை, சிறைப்படுத்துவதை நிறுத்த வேண்டும்.
- இந்திய விரிவாதிக்கத் தலையீட்டை பகிரங்கமாக எதிர்க்க வேண்டும்.
- அமெரிக்கத் தலைமையிலான உலக வல்லரசை பகிரங்கமாக எதிர்க்க வேண்டும்.

இக்கடமையை நீங்கள் முன்னேடுக்கம் போது உங்கள் இயக்கம் மேலும் பாரதூரமான பின்னடைவிற்கு தள்ளப்படலாம். இப்பணியில் நீங்கள் மரணத்தைத் தழுவலாம். ஆனாலும் உங்கள் தியாகங்கள் வீண்போக மாட்டாது. கொண்ட லட்சியத்திற்கு முன் நிபந்தனையாக உள்ள இவையே, தமிழீழ மக்களை அவர்கள் பிணைத்துள்ள அடிமைத்தளைகளில் இருந்து விடுவிப்பதற்கும் முன் நிபந்தனையாக உள்ளது. தமிழீழத்தை பெறுவதில் நீங்கள் காட்டும் உறுதிபோல் மேற்சேன்ன நிலைப்பாடுகளை எடுப்பதிலும் உறுதி காட்டுவீர்களானால் தேசபத்த சக்திகளும், புரட்சியாளர்களது ஆதரவும் ஒத்துழைப்பும் தமிழீழ தாகமுள்ள உங்களுக்கு தொடரும்.. தமது சுதந்திரத்திற்காக தழிழீழ மக்கள் விலையாகக் கொடுத்த தியாகங்களுக்கும், இதுரை மாவீரர்களான புலிப் போராளிகள் சிந்திய இரத்தத்திற்கும் நீங்கள் சொல்லும் உண்மையான வீர வணக்கம், மேற் சேன்ன கொள்கைகளை பகிரங்கமாக அறிவித்து போராட்டத்தை – யுத்தத்தை தொடர்வதாக இருக்க வேண்டும்.

**ஒருங்கிணைப்புக் குழு**
**தமிழீழ தேசபக்த முன்னணியினர் கழகம்**
(PVTO)

# அரசியலும் இராணுவமும்.

### ஆயுதம் ஏந்திய போராட்டத்தின் நோக்கம் என்ன?

சிறிலங்கா இனவாத முதலாளித்துவ அரசினதும், ஏகாதிபத்திய சக்திகளினதும் சுரண்டலிலிருந்தும், அடக்குமுறையிலிருந்தும் தமிழீழ மக்களை விடுதலை செய்தல், இதன் மூலம் சிங்களப் பாட்டளி மக்களின் புரட்சிக்கு வழிமைத்தல், எனவே இந்தப் போராட்டமானது இலங்கை தேசிய இனப்பிரச்சனைக்கு ஓர் தீவாகவும், உலகப் புரட்சியின் ஓர் அம்சமாகவும் விளங்குகிறது. இந்த பரந்து பட்ட நோக்கத்தை அடிப்படையாக வைத்து துரதிருஷ்டியுடன் எமது நாட்டின் புவியியல், பொருளாதார அம்சங்களையும், எதிரியின் இராணுவத் தன்மையையும், சர்வதேச நிலமைகளையும் கருத்திற்கெடுத்து விடுதலைக்கான அரசியல் இராணுவ வேலைத் திட்டங்களை வகுக்கப்பட வேண்டியுள்ளது.

குடந்தகாலத்தில் தமிழீழக் கோரிக்கையை தமது பாராளுமன்ற ஆசனங்களைக் கப்பற்றும் சுலோகமாக வைத்த தமிழர் விடுதலைக் கூட்டணியிடம் இதனை எதிர்பார்க்க முடியாததுதான். ஆனால் ஆயதம் ஏந்திப் போரிடப் புறப்பட்ட இயக்கங்களிடம் கூட இதுபோன்றதொரு முழுமையான வேலைத்திட்டம் இல்லாதது வருந்தத் தக்கதே. அவ்வப்போது தமது தேவைகளுக்கும், தமது உணர்வுகளுக்கும் ஏற்ப நடைவடிக்கைகளில் இறங்கி பின்பு அதன் விளைவுகளுக்கு ஏற்ப அடுத்த நடைவடிக்கைகளை எடுத்து இவ்வாறு சம்பவங்களின் பின்னாவேயே சென்றுள்ளமையே இன்று வரை நடந்து வருவதாகும்.

சிலர் தமது நடவடிக்கைகளை நியாயப்படுத்துவதற்காக தமது நடவடிக்கைகளை ஒத்த ஏதாவது சில அம்சங்களைக் கொண்ட ஏதாவது ஒரு நாட்டின் புரட்சிகரப் போராட்டத்தை தாம் பின்பற்றுவதாகப் பிரச்சாரம் செய்கிறார்கள். ஆனால் அந்தப் பொராட்டத் திட்டங்களைக் கூட அது சரியாகப் பின்பற்றவில்லை. ஏன்பதை

சூர்ந்து அவதானித்தால் இனம் கண்டுகொள்ளலாம்.
யாழ் குடாநாட்டில் மாத்திரம் செயற்படுவதை நகர்ப்புறக் கொரில்லா வாதத்தினுடாக நியாயப்படுத்துவார்கள். வேறும் இராணுவக் குழு மட்டும்செயற்பட்டு தமது அரசியற் கடமைகளை கைவிடுபவர்கள் ரெஜிஸ் டெப்ரோயின் ''கட்சியில்லா புரட்சி'' தத்துவத்தின் பின்னால் தமது பலவீனங்களை மறைத்துக் கொண்டார்கள். ஆயுத நடவடிக்கையில் இறங்க முடியாத போது ''மக்கள் யுத்தத்தைப்'' பற்றிக் கூறுபவர்கள் வாய்புக்கள் கிடைத்த போது தம்மால் முன்வைக்கப்பட்ட கோசங்களை கைவிட்டதுமுண்டு. பல தாக்குதல்கள் நடத்தி போராட்டத்தை முன்னேடுக்க முடியாதவர்கள் கெரில்லா எதிர்ப்பு வாதத்தை முன்வைக்கிறார்கள். இப்படிக் கூறுவதால் இத் தத்துவங்களைக் கூறுபவர்கள் எல்லோருமே சந்தர்ப்ப வாதிகள் என நாம் கருதவில்லை. ஆனால் கடந்த காலத்தில் பலர் தாம் கூறும் தத்துவங்களை, போராட்ட முறைகளை விசுவாசமாக முன்னேடுக்காமல் அவ்வப்போது தமது போக்குகளை நியாயப்படுத்தவே தமக்கு வசதியான விதத்தில் பாவித்துள்ளமை கவனிக்கத் தவறக் கூடாது என்பதே எமது வாதமாகும். ஏதாவது ஒரு போராட்ட முறையை பின்பற்றுவதாகக் கூறுபவர்களிடம் அத்திட்டுத்தை முழுமையாக வெற்றிபெறச் செய்வதாற்கான வேலைத்திட்டம் இருக்கின்றதா என்பது கவனிக்க வேண்டிய விடையமாகும்.
இதில் முக்கியமான அம்சம் என்னவென்றால் நாம் குறிப்பிடும் கோட்பாடுகளை சரியாகக் கடைப்பிடிக்கவில்லை என்பதை சந்தர்ப்பம் வரும் போதேல்லாம் தாம் தவறெனக் கூறி நிராகரிக்கத் தக்கதாகக் கூறும் நடவடிக்கைகளில் இறங்குவதன் மூலம் நிருபித்து விடுகிறார்கள்.
ஆயதம் எந்திய குழக்களின் தலைவர்களில் பலருக்கு இருக்கும் அரசியல் வறுமையும், முழுமையான மக்களின் நலனுக்கு வழிவகுக்க அவர்களது வர்க்க நலன்கள் இடம் கொடாமையுமே இதன் பிரதான காரணங்களாகும். இதுவெ இன்றைய நெருக்கடிகளில் பிரதானமானது.

## எதிரிகளை நண்பர்களை இனம் காணல்

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஒரு முழுமையான அரசியல் போராட்டமாக் கருதி இதில் சம்பந்தப் பட்டுள்ள சக்திகள் பற்றிய மதிப்பீட்டை செய்வது எமது யுத்த தந்திரத்தையும், நடைமுறைத் தந்திரத்தையும் வகுப்பதில் மிக முக்கியமானது.
இந்த வகையில் எமது போராட்டத்தின் மதன்மை சக்திகள், துணைசக்திகள், நட்புச்சக்திகள், எதிரி, எதிரியின் நட்புச் சக்திகள் போரண்றவற்றை சரியாக இனங்கண்டு முதன்மையான சக்திகளின் தலைமையில் துணைச்சக்திகளை அணிதிரட்டவும், எமது நட்புச் சக்திகளை படிப்படியாக வெண்றேடுப்பதன் மூலம் எதிரியை மேலும் மேலும் தனிமைப்படுத்துவது எமது வட்டுதலைக்கு முன்நிபந்தனையானது. ஆத்தோடு நாம் வெளிச்சக்திகளின் உதவிகளை நாடும் போது அவை எமது போராட்டத்தின் நட்புச்சக்திதான என உறுதி செய்த பின்பே உதவிகளைப் பெறவேண்டும். இஞ்கும் எமது போராட்டத்தின் அரசியற் தன்மைகளை இனம் காண்பதால் ஏற்பட்டு தவறுகள் சிங்கள மக்களை வென்றேடுப்பதற்குப் பதிலாக அவர்களை சிறிலங்கா அரசு பயன்படுத்த அனுமதித்துள்ளோம். முஸ்லீம், மலையக மக்கள் எமது போராட்டத்துடன் சரியாக இணைக்கப்படவில்லை. இயக்கங்களின் பொறுப்பற்ற நடைவடிக்கைகளாலேயே இவ்வுறவுகள் பெருமளவில் சிதைக்கப்பட்டுமுள்ளது. தேன்னிலங்கையில் நடைபெறும் உழைக்கும் மக்களின் போராட்டத்தில் இருந்து தமிழீழ விடுதலைப் போராட்டமானது தனிமைப் படுத்தப்பட்டுள்ளது. இன்று எமது போராட்டம் எமது மக்களின் செந்தப்பலத்தில் தங்கியிருப்பதற்குப் பதிலாக இதனை அன்னிய சக்திகளிடம் ஒப்படைத்துவிட்டு ''அப்பத்தைப் பங்கிடும் குரங்கின் முன்னால் காத்திருக்கும்'' நிலைமை தோன்றியுள்ளது. இந்த நிலையிலிருந்து மீளாவிட்டால் தமிழீழ மக்களின் விடுதலை என்பது கனவாகவே போகும்.

## வெகுஜனங்களை அணிதிரட்டல்.

தமிழீழ மக்கள் விடுதலைப் போராட்டத்தில் அடக்கி ஒடுக்கப்படும் மக்களே பிரதான போராட்ட சக்தியாகும்.

புரட்சிகர தாபனமானது போராட்டத்தை முன்னேடுத்து வழிகாட்டி தலைமை கொடுக்கலாமே யன்றி மக்களுக்குப் பதிலாக போராட முடியாது. புரட்சிகர தாபனமானது மக்கள் மத்தியில் பிரச்சாரங்களை மேற்கோன்டு, அவர்களை தாபன மயப்படுத்தி, ஆயுதபாணியாக்கி அவர்களை புரட்சிகர அரசியல் அதிகாரத்தை நிறுவ உதவுவதே அதன் கடமை என்பதை உணரவேண்டும். இவ்வாறு தாபன மயப்படுத்தப்பட்ட மக்கள் தமக்கிடையே எழும் பிரச்சனைகளை சரியான அரசியல் வழிகாட்டலில் தீர்த்துக் கொள்ள உதவவேண்டும்.

இவ்வாறு அரசியல் அணிதிரட்டலை மேற்கொண்டு மக்கள் மத்தியில் பங்காற்றுகையிலேயே மக்கள் பலம் பெறுவதுடன் தாபனங்களும் மக்கள் மத்தியில் இருந்து கற்றுக் கொள்ள முடியும். தம்மை திருத்தி அமைத்துக் கொள்ள முடியும்.

இதுவரை விடுதலைப் போராட்டத்துக்கு மக்கள் அதாரவாக உள்ளார்கள் என்பது உண்மையே. ஆனால் இதுபொன்ற எழுச்சிகள் அரசியல் வெலைத்திட்டத்தினுடாக தாபனமயப் படுத்தாதவரை மிக நெருக்கடியான காலகட்டத்தில் நின்று பிடிக்க மாட்டாதது மாத்திரமல்ல எதிரியின் பக்கங்களைக் கூட சார்ந்த வரலாறு நிறையவே உண்டு.

முக்களை பார்வையாளர்களாக இருக்க வேண்டாம் எனவும், பங்காளிகளாக மாறும் படியும் அனைத்து இயக்கங்களும் அழைப்பு விடுத்த போதும் இது நடைமுறையில் தமக்கு நிதி, உணவு, மறைவிடம், சரீர உதவிகளைப் பெறுவது என்ற நோக்குடனேயே மட்டுப்படுத்தப் பட்டுள்ளது. ஆதற்கு மேல் தாபன மயப்படுத்தி தமது உரிமைக்காகப் போராடவும் தமது அதிகாரங்களை கையிலெடுப்பதற்கான வேலைத்திட்டங்கள் இதுவரையில் வைக்கப்படவில்லை. ஏன்பது மட்டுமல்ல பொது மக்கள் இன்று இயக்கங்களை விமர்சிப்பதற்கே பயப்பிடும் நிலைதான் உண்மையானது. இந்நிலமை நீடிக்கும் வரை வெகுஜனங்களை அணிதிரட்டுவது என்பது வெறும் கோசங்கள் என்ற அளவைத் தாண்டவே மாட்டாது. இதுவெ வருங்காலத்தில் எமது போராட்டத்தை பாதிக்கப் போகும் பாரதூர அம்சமுமாகும்.

அப்பாவி மக்கள் தாக்கப்படுதல், தனியார் வீடுகளில் கொள்ளைகள், கடத்தி பணயம் வைக்கப்படுதல், மிகையான தண்டனை வழுங்கல், அநாவசிய வாகனக் கடத்தல், லொறிகளில் கொள்ளைகள், அத்தியாவசிய சேவைகளின் பாதிப்பு, மக்களின் நலன்களை கருத்திற் கொடுக்காத நடவடிக்கைகள் போன்றவை எமது போராட்டத்தை இந்த இலக்கிலிருந்து இன்னும் இன்னும் விலகிச் செல்லவைக்கும்.

## இயக்கத்துள் ஒருமைப்பாடும் ஐக்கியமுன்னணியும்

போராட்த்தில் ஈடுபடும் போராளிகளை இணைக்கும் ஒரே அம்சம் அவர்களது போராடும் அரசியல் நோக்கே ஆகம். போராளிகளின் அரசியல் உணர்வை உயர்ந்த மட்டத்திற்கு வளர்த்து அதனூடாக மட்டுமெ பொரிடும் இயக்கத்தினுள் ஐக்கியத்தைப் பேணமுடியும். மூறாக இராணுவத்திற்கு அரசில் இல்லை என்றான பின்பு வெறும் துப்பாக்கிகளால் அரசியலைப் பேணமுடியாது. இந்த நிலையில் சமுதாயத்தில் உள்ள அனைத்துக் குறைபாடுகளும்இயக்கங்களினுள் வளர பிரச்சனைகளையும், சிக்கல்களையும் தொற்றுவிக்கின்றன. இயுக்கத்தினுள் வர்க்க முரண்பாடுகள் கூர்மை அடைகின்றன. ஆதிகாரப் போட்டிகளும், பிரதோச, சமய, மத உணர்வுகளும்பரஸ்பர சந்தேகமுமே வளர்கின்றன. புடிப்படியாக இவை தாபனத்தின் உயிரோட்டத்தையே அரித்து உண்கின்றன.

இப்படிப்பட்ட நெருக்கடிகள் இன்று பல விடுதலை இயக்கங்களினுள்ளும் ஏற்பட்டு இரண்டாவது போர் முனையொன்றை தொற்றுவிக்கின்றன. இதுனைத் தீர்ப்பதற்கு இன்றுள்ள விடுதலை இயக்கங்கள் பலவும், பல வேறுவகைப்பட்டு வழிமுறைகளைக் கையாழ்கின்றன.

முதலாவது வகை, அரசியல் உணர்வின்மையே பிரச்சனைகளுக்கான காரணம் என்பதற்கு பதிலாக சில உறுப்பினர்களிடையே இருக்கும் அற்ப சொற்ப அரசியல் அறிவே பிரச்சனைகளின் தேற்றுவாய் என தலைமைகள் கருதுகின்றன. இதுனால் இராணுவத்தில் உள்ளோர் அரசியல் புத்தகங்களை வாசிப்பது, அரசிலைப் போசுவது, மூன்று பேருக்கு மேலாகக் கூடிப் பேசுவது, தாபனத்தையும்

தலைமையையும் விமர்சிப்பது அனைத்துமே தண்டனைக்குரிய கடுமையான குற்றங்களாகின்றன. இயுக்கத்தை உடைப்பதற்கான சதி முயற்சியாகவே கருதப்படும்.

இருண்டாவது வகை, இந்த முரண்பாடுகளை பலமான அடக்கு முறைகளால், சித்திர வதைகளதல், கொலைகளால் அடக்கி விட முனைந்து தமது இராணுவ முகாம்களை யே சித்திர வதைக் கூடமாக மாற்ற முஜனகிறார்கள். இது குறிகிய கால நோக்கில் பயன் விளைவிப்பதுபோல இவர்களுக்கு தோன்றினாலும் நீண்டகாலத்தில் போரளிகளின் போராட்ட உணர்வை அழித்து விடுவதுடன் மேலும் மேலும் மோசமான மோதல்களை ஏற்படுத்தி தாபனத்தை சிதைத்துவிடும்.

மூன்றாவது வகை, இந்த முரண்பாடுகளை தோழர்களுடைய கவனத்தை திசைதிருப்புவதன் மூலம் தணிக்க முயலுகின்றன. இராணுவத்தில் உள்ள தோழர்களுக்கு அதிக செளகரியங்கள் வழங்குவது. இவற்றில் பிரதானமானது நிதி, வாகனங்கள், பொழுது போக்குச் சாதனங்கள் போன்றவற்றையும், சிகரட், மது போன்றவற்றிலும் தாரளமாக இருப்பார்கள். அவர்கள் விடும் தவறுகளைக் கண்டித்து திருத்தாமல் விடுதல், அடிக்கடி இராணுவ நடவடிக்கையில் ஞுடுபடுதல் போன்ற வழிமுறைகளாகும். இந்து வழிமுறைகளால் தாபனமானது தனது ஒழுக்க, கட்டுப்பாடுகளை படிப்படியாக இளந்து தாரளவாத நோயால் பீடிக்கப்படுகிறது. போர்க் குணாம்சம் படிப்படியாக மறைந்து நகர்புறத்து இழைஞ்ஞர்களின் இன்ப நாட்டத் தன்மை ஏற்படுகிறது. மக்களின் நலன்களை கருத்திற் கொடுக்காத மக்களுக்கு சுமையாக மாறும் போக்கு ஏற்படுகிறது. இது போன்ற ஊதாரிச் செலவீனங்கள் மூலம் பல இராணுவத் தளபாடங்களைக் கொள்வனவு செய்யக் கூடிய பணம் விரையமாவது மட்டுமல்ல மக்களின் வெறுப்பிற்கு ஆளாவதுடன் நீண்ட காலத்திற்கு பொருளாதார ரீதியில் தாக்குப் பிடிக்க முடியாது போகவே மக்களின் சொத்துக்களைக் கொள்ளையிடுதல் போன்ற நடவடிக்கைகளில் ஞுடுபடுவதுடன் உழைப்பில் ஞுடுபடாத ஊழல் படிந்த சோம்பேறிக் கூட்டங்களாக, சமுதாய உழைப்பை அபகரித்து வாழ்பவர்களாக மாற்றி விடுகிறது இதுபோன்ற தொரு இராணுவம் நீண்ட காலமாக ஈவிரக்கமற்ற யுத்தத்தில் நின்று பிடிக்கவோ, வெற்றி பெறவோ மாட்டது.

1983 யூலைக்குப் பின்பு இயக்கங்களில் சேர்ந்து பயிற்சி பெற்ற பல போரளிகள் இன்று அந்தந்து தாபனங்களை விட்டு வெளியேறி விட்டார்கள் அல்லது தப்பி வெளிநாடு ஓடிவிட்டார்கள். பலர் சொந்த தாபனங்களாலேயே கொலை செய்யப்பட்டு விட்டார்கள். இன்னம் பலர் நீண்டகாலப் பயிற்சி என்ற பெயரில் இரண்டு வருடங்களுக்கு மேலாக பயிற்சி முகாம்களிலேயே தடுத்து வைக்கப்பட்டு இருக்கிறார்கள். இது முழுப் போராட்டத்திற்குமே இழப்பாகும். இதனைத் தடுத்து நிறுத்துவது எப்படி?

இராணுவத்துள் அரசியல் வேலை செய்தல் அதன் மூலம் தோழர்கின் அரசியல் உணர்வு மட்டத்தை, போர் குணாம்சத்தை உயர்ந்த மட்டத்தில் பேணல், போராளிகளுக்கு மூன்று ஜனநாயகம் எனப்படும் அரசியல், பொருளாதார, இராணுவ ஜனநாயக உரிமைகளை வழங்குதல், சரியான அரசில் வழிகாட்டலில் அவர்களது தவறுகளையும், தலைமையின் தவறுகளையும் விமர்சனம் – சுயவிமர்சனம் மூலம் திருத்தல், அடித்தல், சித்திரவதை செய்தல், கொலை செய்தல் போன்றவற்றை முற்றாக நிறுத்தல்.

இதன் மூலம் போர் வீரர்களிடையேயும், வீரர்களுக்கும் அதிகாரிகளுக்குமிடையிலும், தலைமைக்கும் இராணுவத்திற்குமிடையிலும் பூரண ஒற்றுமையும் பரஸ்பர புரிந்துணர்வும் நிலவும். தனது சுயவிருப்பம் ஒன்றின் பெயரில் மட்டுமே அவன் இரானுவத்தில் இனைந்திருப்பதனால் அவனது உணர்வு பு?ர்வமான இயக்கப் பாத்திரம் அதிகரிக்கிறது. தன்னுடையதும், தனது சமூகத்தவரதும் நலன்களுக்காகவே தான் போராடுகிறேன் என்ற எண்ணம் அவனது பாரிய தியாகங்களுக்கு தயாரனவனாக மாற்றும். மக்களின் சக்தியை உணர்ந்த இவர்களிடம் அராஜகம் தோன்றாது சுயமாகவே மிக உயர்ந்த கட்டுப்பாட்டை பேணுவான். இது வென்றே மிக நீண்ட, ஈவிரக்கமற்ற யுத்தத்தில் இராணுவத்தினுள் அனைவரையும் ஒரு மனிதன் போல ஐக்கியப் பட்டு அனைத்துக் கஸ்டங்களையும் வெல்லுவதற்கான அழியாகும். தமது சொந்தத்து தாபனங்களுக்குள் ஐக்கியத்தைப் பேண

முடியாதவர்கள் ஏனைய தாபனங்களுடன் ஒரு காரியார்த்தமான ஐக்கியத்திற்கு வருவதென்பது சாத்தியமற்றதே. இயக்கங்களின் ஐக்கிய முன்னணி கூட இதே அடிப்படையிலே சாத்தியமாகும். பொது அரசியல் நோக்கத்தை உயர்த்திப் பிடிப்பதன் மூலம் பொதுவான வேலைத்திட்டத்தை உருவாக்கல், ஏனைய தாபனங்களின் இருப்பையும், அவர்களது பங்களிப்பையும் அங்கீகரித்தல், ஐக்கிய முன்னணியினுள் இயக்கங்களின் சமத்துவத்தையும், ஜனநாயகத்தையும் பேணல், முரண்பாடுகளை பேச்சு வார்த்தைகள், விமர்சனம் — சுயவிமர்சனம், பரஸ்பர விட்டுக் கொடுப்பு மூலம் தீர்த்து வைத்தல் என்பனவே செயலூக்கம் மிக்க பரந்துபட்ட ஐக்கிய முன்னணிக்கு வழிகாட்டும்.

## போராட்டமும் புதிய சமுதாயமும்.

முதலாளித்துவ ஜனநாயம் என்பது அடிப்படையில் ஆளும் வர்க்கத்திற்கு சேவை செய்வது. அதன் பலாத்காரத் தன்மையை மறைத்துக் கொண்டுள்ளது என்ற போதும் கூட அதில் சில ஜனநாயக உரிமைகளை அனுபவிப்பதாகவே மக்கள் உணர்கிறார்கள். தாம் விரும்பும் கட்சிக்கு (அவை முதலாளித்துவ நலன் கருதும் கட்சிகள் தான் என்ற போதும் கூட) வாக்களித்து ஆட்சிக்கு அமர்த்துதல், அந்தக்கட்சியானது தான் கொடுத்த வாக்குறிதிகளைக் காப்பாற்றத் தவறும் பட்சத்தில் அடுத்த தேர்தல் அதனைத் தூக்கி எறித்து விட்டு வேறோர் கட்சியை (இதுவும் மதலாளித்துவ நலன் பேணும் கட்சியே) ஆட்சிக்கு கொண்டுவரல் போன்றவையே இவையாகும்.

விடுதலைக்குப் பின்பு, புரட்சிக்குப் பின்பு தோற்றவிக்கப்படும் மக்கள் ஜனநாயம் என்பது போலி முதலாளித்துவ ஜனநாயகத்திலும் பார்க்க பன்மடங்கு உயர்வானது என்ற போதிலும் கூட வெகுஜனங்கள் இயக்கங்களால் வைக்கப்படும் சுலோகங்களை மட்டும் அடிப்படையாகக் கொண்டு, அதன் தத்துவார்த்த விளக்கங்களை புரிந்து கொண்டு புதிய அமைப்பை வரவேற்பார்கள் என எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் அவர்களுக்குத் தெரியும் இப்போது எடுத்து வைக்கப்படும் அடியானது முதலாளித்துவ பாரளுமன்ற அர்த்தத்தில் மீண்டு வர முடியாத அடி என்பது, சோவியத் யூனியனில் கடந்த 68 வருடங்களாகவும், சீனாவில் கடந்த 36 வருடங்களாகவும் கம்யூனிசக் கட்சி என்ற ஒரே கட்சி ஆட்சி அதிகாரத்தில் இருப்பதை அறிவார்கள். ஆகவே தமது வாக்குப் பலத்தால் கட்சியை மாற்ற முடியாத புதிய அமைப்பிற்கு செல்லு முன்பு அவ்வமைப்பு மிக உயர்ந்து ஜனநாயம் கொண்டது தான் என உறுதி செய்து கொள்ள வேண்டிய தேவை அவர்களுக்கு நியாயமாகவே எழும். இந்தச் சந்தேகத்தை தீர்த்துவைத்த பின்பே மாற்றத்தைக் கொண்டு வர முனையும் தாபனத்தை நம்பி தமதும் தம்முடைய சந்ததியினதும் வருங்காலத்தை ஒப்படைக்கத் தயராவார். இதனை வெறுமனே சுலோகங்களினால் வளங்கிவிட முடியாது. போராட்டக் காலத்திலேயே, போராட்டத்தினூடதகவே, போராட்டத் தாபனங்களின் நடைமுறையின் ஊடாகவே அப்படிப்பட்டதோர் உயர்ந்த ஜனநாயகத்தை நோக்கியே சென்று கொண்டிருக்கின்றோம் என்பதனை தாபனங்கள் நிரூபிக்க வேண்டியுள்ளது. அப்படி நிரூபிக்கும் பட்சத்திலேயே வெகுஜனங்கள் தமது தலைவிதியை அந்தத் தாபனத்திடம் ஒப்படைத்து அந்தத் தாபனத்தில் அலையலையாக அணிதிரள்வார்கள். இப்படிப் பட்டதொரு தாபனம் மட்டுமே மிகப் பரந்துபட்ட வெகுஜன அடித்தளத்தைப் பெற முடியும். உயர்ந்த ஜனநாயக வடிவத்தை நோக்கிச் செல்லும் தாபனத்தின் நடைவடிக்கைகள் தனது போராட்ட நடைமுறையிலேயே இரண்டு வகையில் வெளிப்படும்.

1. இராணுவத்தினுள் உள்ள ஜனநாயகத் தன்மை
2. மக்களுடனான உறவில் அது காட்டும் மனித நேயம்.

## இராணுவத்தினுள் உள்ள ஜனநாயகத் தன்மைகள்

அடக்குமுறை இராணுவமானது ஆளும் வர்க்கத்தால் அல்லது ஆளும் கும்பலால் தனது சொந்த மக்களுக்கு எதிராகவே தனது சொந்த மக்களை அடக்குவதற்காகவே பயன்படுத்தப் படுவதாகும். இந்த நிலையில் உள்ள போர் வீரர்கள் அரசியல் உணர்வு பெறுவது மட்டுமல்ல இந்த இராணுவத்தில் ஜனநாயகத் தன்மைகள் காணப்படுவதே அதனை அடக்கு முறைக் கருவியாக செயல் படுவதினின்றும் தடுத்துவிடும். மாறாக மக்கள் இராணுவத்தில் அரசியல்

3ம் பக்கம் பார்க்க ☞

உணர்வும், ஜனநாயகத் தன்மையும், போர் வீரர்களின் உணர்வு பூர்வமான இயக்கப் பாத்திரத்தை வலுவாக்கி, போர் வீரர்களுக்கும் அதிகாரிகளுக்கும் இடையில் ஒற்றுமையை வலுவாக்கி அதன் போரிடும் அற்றலை பன்மடங்கு அதிகரிக்கச் செய்யும். இராணுவத்தில் ஜனநாயகமானது 'மூன்று ஜனநாயகங்கள்' எனும் பெயரால் அழைக்கப்படும் அரசியல் ஜனநாயகம், பொருளாதார ஜனநாயகம், இராணுவ ஜனநாயகம் ஆகிய மூன்று அம்சங்களையும் உள்ளடக்கியதாகும்.

### அரசியல் ஜனநாயகம்

இராணுவத்தில் கீழணிகளின் ஜனநாயத் தன்மை மிக்க கூட்டங்களையும், மகாநாடுகளையும் நடத்த வேண்டும். இதில் அரசியல் நிலைமைகள், தாபனத்தின் அரசியல் நிலைப்பாடுகள், தாக்குதல், வேலை, கல்வி, வாழ்க்கைப் பிரச்சனை போன்றவை பற்றி போர்வீரர்களும் அதிகாரிகளும் கலந்துரையாடுவார்கள். இக் கூட்டங்களில் அதிகாரிகள், போர்வீரர்கள் என்ற பேத் இன்றி பரஸ்பரம் ஒருவரை ஒருவர் விமர்சிக்கும் உரிமையைப் பெறுவர். இதனால் இராணுவத்தில் உள்ள தவறுகள் சுட்டிக் காட்டப்பட்டு திருத்துப்படும். தவறான பேர்வழிகள் அம்பலப் படுத்தப் படுவார்கள். சிறந்த ஊழியர்கள் முன்னுக்கு வருகிறார்கள்.

கீழ்மட்ட ஊழியர் பதவிக்கு நியமிக்கப் படுவதற்காக நபர்களை சிபார்சு செய்யும் உரிமையை கீழணியிலுள்ள வீரர்கள் பெறுவார்கள். கீழ்மட்ட ஊழியர்கள் மிகவும் பற்றாக் குறையாக இருக்கும் போது இம்முறை மிகவும் உபயோகமானது, ஆயினும் இது பொது விதியாகக் கருதப்படமாட்டது.

### பொருளாதார ஜனநாயகம்

படையினரால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளுக்கு கம்பனி சப்பிளை, உணவு விடையங்களை நடாத்துவதில் கம்பனித் தலைமைக்கு உதவி செய்யும் உரிமை இருக்கும் (ஆனால் அதனை மீறக் கூடாது) இதன் மூலம் வீரர்களுக்கு சிறந்த வாழ்கை வசதிகள் உத்தரவாதப்படுத்தப் படும். இராணுவத்தில் அனைத்து இன்ப துன்பங்களை அதிகாரிகளும் வீரர்களும் சமமாகப் பகிர்ந்து கொள்ளல்.

### இராணுவ ஜனநாயகம்.

பயிற்சிக் காலங்களில் அதிகாரிகளுக்கும் போர் வீரர்களுக்குமிடையில் பரஸ்பரம் போதனை முறை நிலவ வேண்டும்.போர்க் காலங்களில் போர்முனையில் சாத்தியமான போதேல்லாம் பல்வேறு விதமான சிறிய பெரிய கூட்டங்களை நடத்த வேண்டும். இக்கூட்டங்களில் கம்பனித் தலைமையின் கீழ் எதிரியின் நிலைகளை எப்படித் தாக்கிக் கைப்பற்றுவது, ஏனைய போர்க் கடைமைகளை நிறைவேற்றவது என்பது போன்ற பிரச்சனைகளைப் பற்றி விவாதிப்பதற்கு போர் வீரர்கள் தட்டியெழுப்பப் பட வேண்டும். போர் பல நாட்கள் நீடிக்கும் வேளையில் இத்தகைய பல கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும்.

இதன் மூலம் போவீரர்களின் முன் முயற்சியும்ஈ உற்சாகமும் அதிகரிக்கும். சிறந்த இராணுவ நுட்பம், தந்திரோபாயங்கள் போன்றவற்றை அடைய இச்செயன் முறை பெரிதும் உதவும்.

இந்து ஜனநாயக முன்னேடுப்புகள் சரியான அரசியல் வழி காட்டலின் கீழ், தலைமையின் மத்தியப் படுத்தலின் கீழ் அமைந்திருப்பது மிகவும் அவசியமானது. தவறும் பட்சத்தில் இது இராணுவக் கட்டளைகளை விமர்சித்துக் கொண்டிருக்கும் அளவிற்கு, புத்த நடைவடிக்கைகளில் சச்சைகளை ஏற்படுத்தி யுத்தத்தை தோல்விக்கு இட்ச் செல்லுமளவிற்கு, யுத்தத்தில் அதிகாரிகள், போர் வீரர்கள் ஆகியோருக்கிடையிலான வேலைப் பிரிவினையையே மறுக்குமளவிற்கு அதீத ஜனநாயகமாக பிரள்வதற்கு வாய்புண்டு. சரியான வழிகாட்டலின்மையே பொதுவாக இதுபோன்ற தவறுகளுக்கு காரணமாகிவீடுவதுண்டு. என்ற போதிலும் இராணுவத்திலுள்ள தவறான பேர்வழிகளும், சேம்பேறிகளும் இந்த அதீத ஜனநாயகச் சுலோகங்களின் பின்னால் மறைந்து கொன்டு தமது கயமைகளைத் தொடர வாய்புண்டு. அதீத ஜனநாயகமானது இராணுவத்தை அதன் போராட்டக் கடமைகளை செய்யமுடியாமல் செயஇது புரட்சியை தொல்விக்கு இட்டுச் செல்லக் கூடியது. ஆகவே இதுபோன்ற மோசமான தவறுகள் கட்டாயம் தவிர்க்கப்பட வேண்டும். இதற்கு வழி ஜனநாயகத்தை மறுப்பதல்ல, அதனை தலைமையின் மத்தியப் படுத்தப்பட்ட வழிகாட்டலில் சரியான அரசியல் வழிகாட்டலில் முன்னேடுப்பதே ஆகும். புரட்சிகர

அடுத்த பக்கம் பார்க்க

# களவாடிய இசையே கர்நாடக இசை

'களம்7' தமிழ் கலைகளின் தன்னம்பிக்கை தொடர்பாக எனத் தலைப்பிட்ட சிவசேகரத்தின் கட்டுரையை விமர்சனத்துக்குட்படுத்தும் நோக்கில் இக்கட்டுரை எழுதப்படுகின்றது.

மொழி என்பது இரண்டு மனிதருக்குள் தொடர்பை ஏற்படுத்தும் ஊடகம் என்ற நிலை மாறி, இது பொருளாதார நலத்துடன் தொடர்புடைய மற்றைய மொழிகள் மீது ஆதிக்கம் செய்யும் ஊடகமாக இன்று உலகில் உள்ளது. உலகளவில் தமிழ் மொழி அதிகமாகப் பேசும் மக்கள் தொகைக்குள் உள்ளடக்கும் வழகயில் முதல் 15க்குள் இருந்து போதும், தமிழ் மொழி தனது நிலையை இழந்துள்ளது. அந்துளவுக்கு ஆதிக்கச் சக்திகளாலும், பொருளீட்டும் வேட்கையின் வெறியில் தமிழ் சிதைந்து போயுள்ளது. நாம் மொழி பற்றிப் பேசும் போது ஒரு மொழி வெறியனாக நின்று பெசுவதல்ல. மாறாக மொழி மீதான ஒடுக்குதலுக்கூடான ஆதிக்க சக்திகளை எதிர்க்கும் வகையில் மொழிபற்றிப் பேசுகிறோம்.

உலகில் 30 லட்சம் வருடங்களுகஇகு முன் பரந்து வாழ்ந்து மனித இனம் அழிந்து இறுதியாக ஆபிரிக்காவில் ஓரிடத்தில் மாத்திரமே மனிதன் எஞ்சியிருந்தான். அவனே எல்லா மனித இனத்தின் மூதாதையன் என்பதுடன், அந்து மக்கள் பேசிய ஒரு மொழியிலிருந்தே ஏனைய மொழிகள் தோன்றின என்பதை இன்ஜறய புதைபொருள் சமூக ஆய்வாளர்கள் திட்டவட்டமாக நிறுவியுள்ளனர்.

மொழிதொடர்பாகவே, இனம் தொடர்பாகவே பேசும் போது வெறுப்பு என்பதற்கு அப்பால், ஆதிக்க சக்திகளை எதிர்த்தல் என்ற அளவில் நாம் மொழி இனம் தொடர்பாக தெளிவான வரையறையைக் கொண்டிருக்க வேண்டும். உலகளவில் அதிக்க சக்திகளை எதிர்க்கும் வைகையில் மக்கள் தமது போராட்டத்தை எதிர்காலத்தில் முன்னேடுப்பர். இறுதியாக ஆதிக்க சக்திகள் இல்லாத ஒரு நிலையில் உலகில் எல்லா மனிதனுக்கும் ஒடுக்கு முறையற்ற, சுரண்டலற்ற, சகமனிதனாக மாறும் நாளில் மொழி என்பது தொடர்பு ஊடகமாக மத்திரமே இருக்கும். இந்நிலையில் இரண்டு மனிதர்கட்கிடையில் தெடர்பு மொழி என்ற வகையில் பல மொழித் தேவை இல்லாது போய் ஒரு மொழியின் தேவை உருவாகும். அப்போது ஒரு இலகுவான மொழியைத் தேர்ந்தேடுக்கவே, அல்லது புதியதோர் மொழியை மக்கள் உருவாக்குவர். இது எதிர்காலத்தில் மக்கள் முன் உள்ள பாரிய கடமையாகும்.

நாம் இன்று பல்வேறு பட்ட ஆதிக்க எல்லைக்குள் வாழ்வதால் ஆதிக்க எல்லைக்குள் வாழ்வதால் நாம் அதை எதிர்த்துப் போராடும் வாழ் நிலையில், மொழி தொடர்பான பார்வை தெழிவாக இருக்க வேண்டும். இந்து வழகயில் கலை தொடர்பாக, குறிப்பாக இசை தொடர்பாக ஆராய்வோம்.

இன்று தமிழிசைக்கு ஏற்படும் ஆபத்து ஒரு புறம், பார்ப்பனிய சமஸ்கிறிதத்தால் ஏற்படும் ஆபத்து மறுபுறம், சினிமா மெல்லிசை மூலம் உட்புகும் மேற்கத்தேய சீரழிவு இசை மூலம் ஏற்படுகின்றது. இன்றுள்ள பார்ப்பனிய கர்நாடக இசை நுட்பமான சதியால் தமிழிசையை விழுங்கியது. அத்தேடு திரையிசையுடன் கூடிய மேற்கத்தேய சீரழிவு இசை தமிழிசையை அழித்தது ஒழிக்கின்றது. இதிலிருந்து மீள சிவசேகரம் உட்பட பலர் கர்நாடக இசையை தமிழில் பாட வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கின்றனர். இன்று கர்நாடக சங்கீதம் இருக்கும் நிலையில் அது பார்ப்பனிய இந்து வாதத்தின் அடிப்படையாக உள்ளதோடு இந்து மத வெறியின் ஊடாகவும் உள்ளது. குறிப்பாக இது தமிழ் மொழி பெசும் மக்களிடையே இசை என்ற நிலையில் இல்லை. தமிழ் மொழி பெசும் இஸ்லாமிய, கிறிஸ்தவ மக்களிடமிருந்து அன்னிபப் பட்ட வகையில் இந்து வாதத்தைப் போமிக்கும் ஒரு வடிவமாகவே உள்ளது. இதை மாற்றி அமைப்பதென்பது இ த ற ் கெ த ் ர ா ன போராட்டத்தின் வெற்றியின் பின்பே சாத்தியமாகும். அந்து வெற்றி சமூக மாற்றத்தின் பின்பே ஒழிய முன்னேருபோதும் சா த ் த ி ய ம ி ல ் லை . தமிழிசையிலிருந்து களவாடிய கர்நாடக இசையை மாத்திரம் இன்று பலர் தமிழிசையாக வரையறுக்க முனைவது ஒரு மோசடியே. இன்று நாட்டுப்புற இசை என்பது இழிசார் பிரிவினரதும் உழைக்கும் மக்களின் வடிவமாகவும் உள்ளது. இவ்விசைக்கு மதப்பிரிவுகள் கிடையாது. இவ்விசை மீது நடத்தும் ஆக்கிரமிப்பும், அழிப்பும் இன்றைய நிகழ்ச்சி நிரலாக உள்ளது.

இன்றய உடனடித் தேவை

நாட்டுப் புற இசையை மீட்டேடுப்பதும், அதைத் தமிழ் மக்கள் இசையாக வளர்ப்பதும் அவசியமாகும். இது இந்தியா இலங்கை என்றளவில் விரிவான விடையம். நாட்டுப்புற இசைக்கு சவால் விடும் மெல்லிசையை எடுப்பின்

1. இளையராஜவின் சினிமா இசை = நாட்டுப்புற இசை + மெல்லிசை + கர்நாடக இசை +மேற்கத்தேய இசை என்பனவாகும்.
2. ஆர் ரகுமானின் திரையிசை = மெல்லிசை + கர்நாடக இசை + மேற்கத்தேய இசை என்பனவாகும்.

இதுவே இவ்விருவர்களுக்கும் உள்ள வேறுபாடாகும். நாட்டுப்புற இசைக்கு சவால் விடுபவர்கள் இவர்களாகவே உள்ளனர். இதையொட்டி விரிவாகக் கீழே ஆராய்வோம். கர்நாடக இசை டிஎன்பது தமிழிசையில் இருந்து களவாடப்பட்டதே. இது இந்தியாவிற் கப்பால் தேசியத்தின் (சிவசேகரம் கூறுவது போல்) பல்வேறு இசைத் தொகுதிகளின் தொகுப்பல்ல. இந்தியத் தேசிம் என்ற ஒனஇறு பிரித் தானியர்களால் உருவாக்கப்பட்டதே ஒழிய அது இயல்பானதாக உள்ளும் இருந்துதில்லை, இன்றும் இல்லை.

கார்நாடக இசை என்பதற்கும் கர்நாடகாத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை. மலையைக்கல் என்றழைப்புது ஒரு காலத்தில் வழக்கமாக இருந்தது. புறநானூறில் இமய மலையை வடபெருங்கல் என்று அழைக்கப்படுகின்றது. இதே போல் கல் நாடு என்பது கர்நாடகமாக மருவியது. இதிலிருந்து கர்நாடகத்திற்கும் கர்நாடக சங்கீதத்திற்கும் எவ்வித தொடர்பும் கிடையாது. கி.பி 1116 முதல் 1127 வரை மகாராஷ்டிராவை அடுத்து தெற்கண்டத்திலிருந்து குறுநில மன்னனான சோமேஸ்வரபுல் மோகன் ஒரு இசை மேதையாவான். இவன் மானசொல்லேசம் என்ற ஒரு இசை நூலை எழுதியவன். இவனது இசையார்வம் தனக்குத் தெற்கேயிருந்து (கீழேயிருந்த) கர்நாடகத்தைப் பார்த்து தமிழிசைக்கு கர்நாடக இசை என்று மதல் மதலில் பெயரிட்டான். இது ஒரு குறிப்பாக கீழே யிருந்து கர்நாடகத்தின் பெயரால் கர்நாடக இசை என்று வழங்கினான். 13ம் நூற்றாண்டில் கரங்கதேவர் இயற்றிய சங்கீத ரத்னகாரம் என்ற முதல் வடமோழி இசை நூலின் பண்ணின் பெயர்கள் தமிழிலேயே குறிப்பிடப்பட்டுள்ளது. இசை தொடர்பான மதல் வட நூல் இதுவாகும். இதில் கர்நாடக இசை ராகங்கள் தமிழிலேயே உள்ளன. இதில் தேவாரவதனி எனவும், தமிழில் குறிப்பிடப்பட்டுளளது. இன்று இவைகள் மறைக்கப்பட்டு விட்டன. கர்நாடக இசை தமிழில் இருந்து களவாடப்பட்டது என்பதற்கு இதைவிடச் சிறந்து ஆதாரம் தேவையில்லை. அடுத்து பார்ப்பனியத்தின் இசை எனவும் அதை இறைவன் அருளினான் என்ற மோசடியையும் பார்ப்போம். பத்தாம் நூற்றாண்டளவில் எழுதப்பட்ட வேதம், இசை, நாட்டியம் தொடர்பாக என்ன கூறுகின்றது என்பதைப் பார்ப்போம். அவர்கள் சாம வேதத்தில் இருந்தே கர்நாடக இசை தேன்றியது எனப் பொய் கூறுவது வழக்கமாக உள்ளது. தேத்தில் பிராமணர்கள் ஆடல், பாடல்களில் ஈடுபடுவது தடட்டவட்டுமாகத் தடைசெய்யப்பட்டு இருந்தது. இதை மீறுபவர்கள் பார்ப்பனிய சேரிகளில் ஒதுக்கி விடப் பட்டனர். இது தொடர்பாக உபநிடத்திலும், சிலப் பதிகாரத்திலும் பல குறிப்புகள் உண்டு. மனு சாஸ்திரத்தில் நாலாவது அத்தியாயத்தில் உள்ள பதினைந்தாவது பாடலில் ஆடுவது பாடுவது கூடாது எனப் பிராமணர்கட்கு உபதேசி க்கப்பட்டுள்ளது. இவர்களின் மரபுப்படி, வேதப்படி இசை தொடர்பான அடிப்படை அறிவு கூட இருக்கவில்லை. தமிழ் பகுதியுடன் ஏற்பட்ட தொடர்பை அடுத்தே இசையுடன் பாடவேண்டும் என்ற ஆவல் பார்ப்பணர்கட்கு ஏற்பட்டது. இதன் பின்பு ரிக்வேதத்தில் இலகுவான பகுதியைப் பிரித்து சாமவேதம் என்ற பகுதியை உருவாக்கி அதற்கு சாமகானம் என்று பெயரிட்டுப் பாடினர். அது ஒரு இசையாகவே இருக்கவில்லை. இதைப் பார்ப்பணர்களே குறிப் பிட்டுள்ளனர். சாமகாணம் என உருவாக்கிய இசை நரி ஊளையிடுவதைப் போன்றுள்ளது எனவும் பார்ப்பணர்கள் குறிப்பிட்டுள்ளனர். பார்ப்பானின் ''மனுசங்'' கதையில நாலாவது பகுதியில் 124ஆவது குறிப்பில் சாமவேத இசையும் அதன் இசையின்மை பற்றியும் குறிப்பிடப்பட்டுளளது. ரிக்வேதத்தில் எட்டாவது அத்தியாயத்தில் 5தாவது குறிப்பிலுள்ள 160வது பாடலில் சாமகானம் பாடும் போது நரி ஊளையிடுவது போல் உள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ரிக் வேதத்தின் எட்டாவது

பகுதியில் சாமகானம் காதுக்கு தவளை கத்துவது போல் உள்ளது என ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் பார்ப்பனரே குறிப்பிட்டுள்ளனர். ஆனவே கர்நாடக சங்கீதம் என்பது பார்பணர்களின் சொந்தச் சரக்கல்ல. மாறாக தமிழர்களிடம் இருந்து சதிமூலம் கைப்பற்றியதாகும்.

இந்தியாவின் பல பகுதிகளில் இருந்து உருவாக்கப் பட்டதாகக் கூறும் சிவசேகரத்தின் கூற்று பார்ப்பணியத்தின் சேவையை மெச்சுவதாகும். பார்ப்பணர்கள் ஆடல் பாடல்களில் ஈடுபடுவது தடை செய்யப்பட்டிருந்து காலத்தில் அவர்களிடம் இசை எதுவும் இருக்கவில்லை. இதை நாம் மேலும் ஆராயின் இன்று கர்நாடக சங்கீதத்தில் உள்ள சமஸ்கிருதச் சொற்களை எடுப்பின் கீர்த்தனை என்பது வடசொல்லல்ல. கீர்த்தி என்ற தமிழ்ச் சொல்லில் இருந்து கீர்த்தனை என்ற சொல்லை உருவாக்கினார்கள். இசைப்பாட்டு என்பது செந்துரை, வந்துரை, வரி, உரு எனத் தமிழில் அழைக்கப்படுவதாகும். இதில் கீர்த்தனை என்ற கர்நாடக இசைச் சொல் உரு என்பதில் இருந்து உருவானதே. இந்த உரு என்பது தொல்காப்பியத்தில் கூடக்கு குறிப்பிடப்பட்டுள்ளது. பல்லவி என்பது பல்லூதளிர் என்பதிலிருந்து உருவானது. அதாவது பல்லவி என்பது தமிழில் தளிர்தல் என வருவதாகும். அனு பல்லவி என்பது தமிழில் பின்னால் வருவதாகும். தமிழிசையைப் பதினைந்தாம் நூற்றாண்டில் முத்துத்தாண்டவப் பிள்ளை என்ற தமிழரே ஒழுங்குபடுத்திப் பயன் படுத்தியவராவார். சுதந்திர தாசனோ அதற்குப் பின்வந்து தியாகராஜரோ இனஇறு பாடும் கர்நாடக இசை வடிவை உருவாக்கினர். இவர்கட்டுகு கீர்த்தனை தெரியாது.. . முத்துத்தாண்டுவப்பிள்ளை இவ்விசையைத் தேவாடத்தில் இருந்தே உருவாக்கியவர். ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்த தேவார இசை தொல்காப்பியத்தில் இருந்தே உருவாக்கப்பட்டது. இது தொல்காப்பியத்திற்கு முற்பட்ட நாட்டுப்புற இசையிலிருந்து உருவாக்கப்பட்டது என்பதை நாம் கூறத்தேவையில்லை. இன்றுள்ள கர்நாடக இசையிலுள்ள ஒவ்வேரு சமஸ்கிரிதச் சொல்லும்.எந்த தமிழ் சொல்லிலிருந்து உருவானது என்பதற்கு தமிழில் மிகச்சிறந்த ஆதாரங்கள் உண்டு. கீர்த்தனை, பல்லவி, தோடி, சரணம், கல்யாணி, திருச்சங்கராபரணம், அதிகாம்பேதி ..... என்ற அனைத்து சமஸ்கிருதச் சொல்லும் எந்தத் தமிழ் சொல்லிலிருந்து களவாடப்பட்டது என நிறுவ முடியம். இன்று ச,ரி,க,ம,ப,த,நி என்ற சமஸ்கிருத சொற்கள் தமிழிசையான குரல், சுத்தம், கைக்கிளை, உழை, இழி, விளரி என்ற சொற்களிலிருந்தே களவாடப்பட்டது. 1917ம் ஆண்டு தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் ‘கர்ணாமிரத சாகரம்’ என்ற 1500 பக்கங்கள் கொண்ட நூலில் கர்நாடக இசை தமிழிலிருந்து எப்படி களவாடப்பட்டது என்பதை மிகவும் தெளிவாக நிறுவியுள்ளார். அதை அக்காலத்தில் இருந்து பல சங்கீத வித்துவான்காள் ஏற்றுக் கொண்டதை, அதே நூலில் அவரவர்களால் சமர்பிக்கப்பட்ட மடலின் மூலம் உள்ளடக்கப் பட்டுள்ளது. இந்து தழில் ஏழு இசையளவு தொடர்பாக 2700 ஆண்டுகளுக்கு முன் எழுதிய தொல்காப்பியத்திலும் ஆதாரமுண்டு. எஸ். ராமநாதன் என்ற அறிஞுர் எந்தெந்துத் தேவாரத்தில் இருந்து இன்றுள்ள கர்நாடகக் கீர்த்தனை உருவானது என்பதை ஆதாரத்துடன் நிறுவியுள்ளார். தேவார இசைக்கு மூலம் காரைக்கால் அம்மையார் என்பதையும் இறுதியாக நடந்து தமிழாராச்சி மகாநாடு ஏற்றுக் கொண்டுள்ளது.

தென்னிந்திய இசை, கர்நாடக இசை, சாஸ்திரிய இசை எனப் பல பெயர்களும் இருந்துள்ளது. தமிழ் மொழியில் இயல், இசை நாடகம் அல்லது முத்தமிழ், மூன்று தமிழ், தமிழ் மூன்று என்ற பெயரிலிருந்து தமிழ் கலை வேறெந்த மொழிக்கும் ஆநேகமாகக் கிடையாது. இசையைப் பொறுத்தவரை செவ்வியல் இசை இருக்கவில்லை. எல்லா மொழிக்கும் நாட்டுப்புற இசை இருந்துள்ளது. நாட்டுப்புற இசையை எடுத்துக் கொண்டால் தமிழில் இன்னும் அழிந்து விடாத சில நூறு சைவகைத் தொகுதிகள் உண்டு. உதாரணம் ஒப்பாரி இசைவகை, தாலாட்டு இசைவகை, மகுடி இசைவகை, வண்டிக்காரப்பாட்டு, அறுவைப்பாட்டு, நடுகைப்பாட்டு, கிளிப்பாட்டு, குயில்பாட்டு, குறவைப்பாட்டு, சங்குப்பாட்டு, நையாண்டிப் பாட்டு, படைப்புவரிப்பாட்டு, பாம்பாட்டிப்பாட்டு, முர்த்தனப் பாட்டு, பல்லாண்டுப்பாட்டு, மயங்கு நிலைப்பாட்டு, முகவரிப்பாட்டு, ........ என சில நூற்றுவகைப் பாட்டு உண்டு. இதற்கு ராகமெல்லாம் உண்டு.

இந்தச் சில நூறுப் பாட்டுவகை ஒவ்வேன்றும் தமக்குள் பல பிரிவுகளைக் கொண்டுள்ளது.

உதாரணமாக தெம்மாங்கு, ஒற்றயைடித் தெம்மாங்கு, நாலடித் தெம்மாங்கு, டப்பாத் தெம்மாங்கு, தெற்கத்தித் தெம்மாங்கு, இழுவைத் தெம்மாங்கு அல்லது நெட்டுத் தெம்மாங்கு, ..... ..... எனத் தொடர்கிறது. நையாண்டி இசை யை எடுப்பின் தெற்கத்தைய நையாண்டி இசை, சோலமலை நையாண்டி இசை, மண்வேட்டி நையாண்டி இசை, ........ எனத் தொடர்கின்றது. சிந்து இசையை எடுப்பின் காவடிச்சிந்து, வழிநடைச்சிந்து, வளையல் சிந்து, கும்மிச்சிந்து, கொலைச் சிந்து, ........ எனத் தொடர்கிறது. பல்வேறு பட்ட தொழில்வகை இருப்பதால் அதைச்சார்ந்து பலவகை நாட்டுப்புற இசைவகைகள் இருப்பது இயல்பாகின்றது. நாட்டுப்புற இசை தொழிலை ஒட்டியும், அவர்களின் அவலத்திலும், சந்தோசத்திலும் உருவானது. இதிலிருந்து சிலவற்றை மூலமாகக் கொண்டே கர்நாடக இசை உருவானது. அந்தத் தமிழிசையைக் களவாடிய பார்ப்பணர்கள் அதைச் சமுஸ்கிருத (தெலுங்கு) இசையாக இந்திய இந்து இசையாக மாற்றியுள்ளனர். இந்நிலையில் தமிழ், நாட்டுப்புற இசையை மீட்டேடுக்க வேண்டும். இது முற்று முழுதாக கர்நாடக சங்கீதத்தில் இருந்து முற்று முழுதாக வேறுபட்டது.

நாட்டுப்புற இசையிலிருந்ர் அதை அளந்து கொள்ளும் வகையில் ஒரு எழுத்து முறையுடன் கூடிய இசை அளவுடீகால் உருவாக்கப்பட வேண்டும். அந்து வகையில் த,ந,ர,ல,.... என்ற அதிகளவில் வரும் நாட்டுப்புற இசைப் பாடல்களைக் கொண்டு புதிய அளவீட்டு முறையைக் கைக்கொள்ள வேண்டும். இது நடைமுறையுடன் கூடிய அந்து உழைக்கும் மக்களின் இசையைத் தேடுவதுடன் தொடர்புடையது. இதன் மூலம் கர்நாடக சங்கீதத்தின் எழுத்துக்களின் அதிர்வெண்களுக்கு இசைவாக இதற்குப் பயன்படுத்தப்பட வேண்டும்.

ச – 240, ரி – 256, க – 258, ம – 324, ப – 360, த – 384, நி – 485 என்ற அதிர்வெண் அளவுகோல் போல் நாட்டுப்புற இசையை அளவிடும் புதியதோர் முறையை உருவாக்கவேண்டும். இது த,ந,ர,ல ..... ... என்ற பல நாட்டுப்புற இசையை அடிப்படையாகக் கொண்டதாகும். இன்றுள்ள கர்நாடக இசை சும்மா இருந்து தின்னும் ஒருத்தனுக்கே பொருந்தும் வகையில் உள்ளது. இது உழைக்கம் மக்களிடம் இருந்து முற்றாக அன்னியப்பட்டுள்ளது.

மனிதனின் முதல் மொழியான தாளத்தின் பின்பே மொழி உருவானது. தாளம் உடலுக்குள் உள்ளது. உடல் தாளகதியில் இயங்குகின்றது. தாளத்தைக் கையில் எடுக்கும் சினிமா மெல்லிகையுடன் கூடிய மேற்கத்தைய சீரழிவு இசை என்பது மனிதனின் உணர்ச்சியைக் குழப்பி மழுங்கடிக்கின்றது. உணர்ச்சி மனிதனிடம் இருந்து பறிட்டு எழுவது, அதை சிதைப்பதன் மூலம் அவனின் இசையறிவை இல்லாது ஒழிக்கின்றது.

இதன் மூலம் பண்பாட்டுச் சீரழிவைப் புகுத்துகின்றனர். உணர்ச்சி என்ற தளத்தைப் பிடித்தபடி பண்பாட்டுச் சீரழிவு பரப்பப்படுகின்றது. இசை இன்பது ஒரு சூட்சுமமான மொழியாக உள்ளதால் இலகுவாகப் பண்பாட்டுச் சீரழிவு ஏற்படுகின்றது.

இன்று தேவை மக்கள் தமக்கான ஒரு இசையை நாட்டுப்புற இசையிலிருந்து உருவாக்க வேண்டும். இந்து இசையின் மூலம் உன்னதமான மனித சமுதாயத்தின் முன்னேற்றத்தை முன் தள்ளிய படி களவாடப்பட்ட கர்நாடக இசையை மீட்பதாகும். இது ஒரு சமுதாயப் புரட்சியின் தொடர்புடைய நடை முறையுடன் தொடர்புடைய விடையமாகும். இது மாநாடுகள் மூலமே கட்டுரைகள் மூலமே சாத்தியமில்லை. இது நடைமுறையில் உந்தித் தள்ளம் ஒரு கருவியாக மாத்திரமே இருக்க முடியும்.

இன்று கர்நாடக சங்கீதம் ஒரு முட்டுச் சந்தியில் உள்ளது. அதைக் கேட்போர் இன்றி பண முதலைகளின் தயவில், இந்திய பார்ப்பனிய அரச ஆதிக்க சதிமூலமே உயிர்வாழ்வது போல் நடிக்கின்றது. இன்று சங்கீதக் கச்சேரிகளை நடத்தும் பணப்போய்களின் கைகளில் கர்நாடகக் கச்சேரி விதைகட்ட மாத்திரமே பயன்படுகிறது. இதிலிருந்து மீள சில தமிழ்பாடல்களை முன் தள்ளுவதும் இசைக் கருவிகளை மாற்றுவதும் என வித்தை காட்டுகின்றனர். இது முன்னேற முடியாத முட்டுச் சந்திக்கு வந்துள்ளது. இதை அவர்களின் பத்திரிகைகள் தவிர்க்க முடியாமல் ஒத்துக் கொள்கின்றன. இதிலிருந்து மீள நாட்டுப்புற இசையை உண்டுசெரிக்க முயல்கின்றனர் இதை ஒருபோதும் அனுபமிக்கக் முடியாது. கர்நாடக சங்கீதத்துக்கு எதிரான போரில் மேற்குடன் கூடிய மெல்லிசைக்கு எதிரான போரில் நாட்டுப்புற இசை போராடி தமிழிசையை மீட்க வேண்டுமேயொழிய

3ம் பக்கம் பார்க்க ☞